வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 17.08.2022 புதன்கிழமை இதழ் : 253 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# புலம்பெயர்ந்தவர்களுக்காக கொழும்பில் தனி பணிமனை!

## அவசரகால சட்டமும் நீடிக்கப்படாது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஓகஸ்ட் 17

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் உதவிகளைப் பெறுவதற்காக கொழும்பில் புலம்பெயர் பணிமனை ஒன்றை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாளை வியாழக்கிழமையுடன் காலவதியாகும் அவசரகால சட்டத்தை நீடிக் கப் போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார். 15



# யுவான் வாங் - 5 கப்பல் நேற்று அம்பாந்தோட்டைக்கு வந்தது!

அம்பாந்தோட்டை, ஓக. 17

சர்ச்சையை ஏற்படுத்திய சீன ஆய்வுக் கப்பலான யுவான் வாங் - 5 கப்பல் நேற்றுக் காலை அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது.

சீனக் கப்பலின் வருகை குறித்து இந்தியா பாதுகாப்பு தொடர்பான கரிசனைகளை வெளிப் 15

# பிரிட்டனின் புதிய திட்டத்தால் இலங்கைக்கு அதிக அனுகூலம்!

லண்டன், ஓக. 17

பிரித்தானியா ஜி. எஸ். பி. வரிச் சலுகை திட்டத்துக்கு பதிலாக டி. சி. ரி. எஸ். திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது. இந்தத் திட்டத்தில் இலங்கையும் உள்வாங்கப்பட்டுள்ளது. இதனால் 80 வீதத்துக்கும் அதிகமான ஏற்றுமதி தயாரிப்புகளுக்கான சந்தை வாய்ப்பை பிரித்தானியாவில் இலங்கை பெற முடியும்.

பிரித்தானியா 15

# மீனவரின் மண்ணெண்ணெய் பிரச்னைக்கு இவ்வாரம் தீர்வு!

## அமைச்சர் டக்ளஸ் உறுதியளிப்பு

கிளிநொச்சி, ஓக. 17

கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் மண்ணெண்ணெய் பிரச்னைக்கு இந்தவார இறுதியில் தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது செய்தியாளர்களின் கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 15

# மருந்து தட்டுப்பாடு நீடித்தால் மோசமான நிலைமை ஏற்படும்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 17

நாட்டில் 200இற்கும் அதிக மருந்துகளுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. தொடர்ந்தும் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுமாயின் நாடு மோசமான நிலைமையை எதிர்கொள்ள நேரிடும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர் 15



படம்: மின்சாரத்தில் இயங்கும் முச்சக்கர வண்டியில் அமெரிக்க தூதுவரும் மின்சக்தி அமைச்சரும்

# முச்சக்கர வண்டிகளை மின் மயமாக்க திட்டம்!

## ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

கொழும்பு, ஓக. 17

முச்சக்கர வண்டிகளை மின்சார சக்தியில் இயங்க வல்லவையாக மாற்றுவதற்கான ஒப்பந்தத்தில் அமெரிக்காவுடன் இலங்கை கையொப்பமிட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகி 15

# கொரோனாவால் எகிறுகிறது பலி!

கொழும்பு, ஓக. 17

நாட்டில் கொரோனா தொற்றால் மேல் 6 பேர் மரணித்தனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்று இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 15

# வடக்கின் காற்றாலை மின் திட்டம் அதானி நிறுவனத்தின் வசமானது!

கொழும்பு, ஓக. 17

வடக்கு மாகணத்தில் பூநகரி, மன்னாரில் காற்றாலை மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுக்க அதானி பசுமை சக்தி நிறுவனத்துக்கு தற்காலிக ஒப்புதலை இலங்கை மின்சார சபையும் நிலையான அபிவிருத்தி அதிகார சபையும் வழங்கியுள்ளன.

இந்தத் தகவலை மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது ருவிற்றர் பக்கதில் தெரிவித்துள்ளார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து விவாதிக்க இலங்கை மின்சார சபை மற்றும் நிலையான அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் நேற்று சந்தித்தனர்.

இந்தியாவின் அதானி பசுமை சக்தி நிறுவனம் 15

# தடை நீக்கம் ரணிலின் ஏமாற்று நாடகம்தான்!

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 17

“தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனி நபர்களும் சேர்க்கப்பட்டனர். தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தாமல், சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும், 15

# கோட்டா தாய்லாந்து சென்ற விமானத்துக்கு பணத்தை செலுத்தியது இலங்கை அரசுதான்!

கொழும்பு, ஓக. 17

முன்னாள் ஜனாதிபதியும், அவரின் பின்னர் அவரது மனைவியும் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்களை பெற உரித்துடையவர்கள் என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது மனைவியும் அண்மையில் சிங்கப்பூரிலிருந்து பிரத்தியேக ஜெட் விமானம் மூலம் தாய்லாந்தின் பாங்கொக்கிற்கு சென்றிருந்தனர்.

இந்நிலையில், இதற்கான பணம் இலங்கை அரசாங்கத்தினால் செலுத்தப்பட்டுள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த அமைச் 15

# கொரோனாவுக்கு யாழில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ்ப்பாணத்தில் கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். போதனா மருத்துவமனை 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

சீனாவின் சர்ச்சைக்குரிய கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துவிட்டது. இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் சீனக் கப்பலின் வருகை இடம்பெற்றிருக்கின்றது.

இந்த சர்ச்சைக்குரிய கப்பலின் வருகையை இடைநிறுத்துமாறு இலங்கை கேட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆனால், இலங்கை அவ்வாறு கோரிக்கை விடுத்த பின்னர் என்ன நடந்தது என்பதை தெற்கு ஊடகம் ஒன்று விலாவாரியாக விளக்கி கட்டுரை ஒன்றை எழுதியிருக்கின்றது.

அந்தக் கட்டுரையில், சீனா விடுத்த சிவப்பு எச்சரிக்கை குறித்தும், கப்பல் வருகையை அனுமதிக்காவிட்டால், எதிர்காலத்தில் சீனா - இலங்கை உடனான உறவு முற்றாகப் பாதிக்கும் என்றும், சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதுபோல கடன்களுக்கான மறுசீரமைப்பு பேச்சில் இருந்து சீனா முற்றாக விலகும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அந் தக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சீனாவின் பதிலடி அத்தோடு நின்றுவிடவில்லை. கடந்த வாரம் சீனாவில் இலங்கை சுற்றுலாத்துறையை மேம்படுத்த ஏற்பாடு செய்திருந்த பெரும் விளம்பரத் திட்டத்தையும் சீனா இரத்துச் செய்திருக்கின்றது.

இலங்கையின் சுற்றுலாத்துறையை வளர்த்தெடுத்தால் மாத் திரமே நாட்டின் பிரதான டொலர் வருமானத்தை மீண்டும் தூக்கி நிறுத்தலாம் என்ற நிலையில், உலகெங்கும் பல்வேறு பிரசார நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கைக்கு வருடந்தோறும் கணிசமான சீனர்கள் சுற்றுலாப் பயணிகளாக வந்துசெல்கின்றனர். இந்நிலையில், சீனர்களை கவரும் வகையில் கடந்த வாரம் பெரும் பிரசார நடவடிக்கைகளை சீனாவில் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கப்பல் பயணத்தை இடைநிறுத்துமாறு இலங்கை கோரிக்கை விடுத்த உடனேயே, சீனா அந்த சுற்றுலா தொடர்பான விளம்பர திட்டத்தையும் இடைநிறுத்தியது.

இலங்கை அரசின் அனுமதி பெறப்பட்ட பின்னரே கப்பல் சீனாவிலிருந்து புறப்பட்டது என்றும், வேறு எங்குமே தரித்து நிற்காமல் கப்பல் இலங்கையை நோக்கி வந்துகொண்டிருப்ப தையும் சுட்டிக்காட்டிய சீனா, இவ்வாறு பலத்த நெருக்கடி களைத் கொடுத்ததைத் தொடர்ந்தே கப்பல் இலங்கை வர அனுமதிப்பது என்று இலங்கை முடிவெடுத்தது.

இந்தக் கப்பல் சீனாவின் மக்கள் இராணுவத்துக்கு சொந்தமான ஆராய்ச்சி மற்றும் உளவு கப்பல் என்று கூறப்படுகின்றது. இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் தரித்து நின்றால், இந்தியாவின் அணுமின் நிலையம் மற்றும் இஸ்ரோ விண்வெளி ஆராய்ச்சி நிலையம் போன்ற இந்தியாவின் முக்கிய தளங்களின் நடவடிக்கைகளை உளவு பார்க்க முடியும் என்றும் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல எனவும் இந்தியத் தரப்பில் சொல்லப்படுகின்றது. இந்த விவகாரத்தில் இந்தியாவின் ஒட்டுமொத்த ஊடகங்களும் இலங்கை அரசின் நடவடிக்கையை கண்டித்து வருகின்றன.

அவர்களின் இந்தக் கரிசனையும் நியாயமானதுதான். ஆனால், இந்த ஊர்க்குருவியை உறுத்துகின்ற விடயம் வேறு ஒன்று சம்பந்தமானது.

அம்பாந்தோட்டை துறைமுகம் இப்போது சீனாவின் நிர்வாகத்தில் இருக்கின்றது. இந்தக் கப்பலில் இருக்கின்ற உளவு பார்க்கக்கூடிய உபகரணங்களை இலங்கைக்கு கொண்டு வருவதோ அல்லது அவற்றை துறைமுகத்தில் உள்ள அவர்களின் அலுவலகம் ஒன்றில் வைத்திருப்பதோ சீனாவுக்கு பெரிய விடயமல்ல.

இந்தியாவை உளவு பார்ப்பதற்காக இத்தனை சிரமங்கள் பட்டு ஒரு கப்பலைக் கொண்டு வந்துதான் சீனா உளவு பார்க்க வேண்டுமா? அந்தக் கப்பலில் உள்ள உபகரணங்களைப்போல வேறு உபகரணங்களை அந்த துறைமுகத்தில் நிரந்தரமாகவே வைத்திருக்க சீனா விரும்பினாலும் அதற்கு சாத்தியமில்லையா என்று கொழும்பிலுள்ள ஒரு பாதுகாப்பு விவகார ஆலோசகர் ஒருவரைக் கேட்டேன். அவர் சிரித்துக்கொண்டே சொன்னார், ஏன் முடியாது? அதிகம் ஏன் இப்போது அங்கே இல்லை என்றுகூட உறுதியாக சொல்ல முடியாதே என்கிறார் அவர்.

இப்போது, இத்தனை சிரமப்பட்டு ஏன் அந்தக் கப்பலை கொண்டுவருகின்றது சீனா என்று அவரிடம் திருப்பிக் கேட்டேன்.

உங்கள் இரகசியங்களை நாங்கள் பெறக்கூடிய நிலையில் தான் இருக்கின்றோம் என்று இந்தியாவுக்கு சொல்வதும் ஒரு காரணமாக இருக்கலாம் என்கிறார் அவர்.

"இதற்குத்தானே எங்கள் தலைவர்கள் திரும்பத் திரும்ப இந்தியாவுக்கு சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு உரிமையை பெற்றுத்தாருங்கள். உங்கள் பாதுகாப்புக்கு நாங்கள் கவசமாக இருப்போம் என்று". அந்த தெற்கின் பாதுகாப்பு விவகார ஆலோசகரிடம் சிரித்துக்கொண்டே சொன்னேன்.!

- ஊர்க்குருவி.





## கொல்லப்பட்ட இந்தியப் படையினருக்கு பலாலியில் தூதுவர், இராணுவம் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஓக. 17

விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவாக பலாலி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்தியாவின் 75 ஆவது நினைவு தினமான நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

1987 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

இந்த மோதல்களில் கொல்லப்பட்ட இந்திய படையினர் நினைவாக இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்திய துணைத் தூதுவர் ராகேஸ் நடராஜ் மற்றும் யாழ். இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன ஜயசுந்தர உள்ளிட்டவர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.

யாழ். இராணுவ தலைமையகத்தின் இராணுவ உயரதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரங்கத்தின் அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணத்திள்ள இராணுவத்தினர் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ)

## சகல பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 17

அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து துணைவேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.

துணைவேந்தர்களின் கருத்துகளை கேட்டறிந்ததன் பின்னர் பல்கலைக்கழகங்களை மீளத் திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார்.

மருத்துவ மற்றும் இணை சுகாதார பீடங்களின் செயற்பாடுகள் தற்போதும் இடம்பெறுவதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

ஏனைய பீடங்களை சேர்ந்த சில மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலேயே தங்கியிருந்தும், மேலும் சிலர் வீடுகளுக்குச் சென்றும் கற்றல் செயற்பாடுகளை தொடர்வதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க சுட்டிக்காட்டினார். (அ)

## நாடு கடத்தும் தீர்மானத்துக்கு எதிரான பிரிட்டன் பெண்ணின் மனு நிராகரிப்பு

கொழும்பு, ஓக. 17

தம்மை நாடு கடத்தும் உத்தரவை ரத்துசெய்ய உத்தரவிடக்கோரி, பிரிட்டன் பெண்ணான கெய்லி ப்ரேஸரினால் தாக்கல்செய்த ரிட் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று நிராகரித்துள்ளது.

மருத்துவ விஸாவில் இலங்கை வந்த நிலையில், காலி முகத்திடல் ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவளித்து காணொளி வெளியிட்ட கெய்லி பிரேஸர் என்ற பிரிட்டன் பெண்ணின் விஸாவை குடிவரவு, குடியகல்வு திணைக்களம் ரத்து செய்ததுடன், ஓகஸ்ட் 15 இற்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேற உத்தரவிட்டது.

எவ்வாறாயினும், தம்மை நாடு கடத்துவதற்கு எதிரான தீர்மானத்தை ரத்துசெய்ய உத்தரவிடுமாறு கோரி, இந்த மனுவை குறித்த பிரிட்டன் பெண் தாக்கல் செய்திருந்தார். (அ)

## வென்மேரி விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 17

தமிழின் ஆற்றல்மிகு ஆளுமைகளை அங்கீகரித்து வென்மேரி அறக்கட்டளை வழங்கும் வென்மேரி விருது வழங்கும் விழா இன்று புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பேராளுமை விருதுகள், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள், பல்துறை சார் ஆளுமை விருதுகள், இளையோர் ஊக்குவிப்பு விருதுகள் மற்றும் கலை நிகழ்வுகள் எனப் பல அம்சங்கள் நடைபெறவுள்ளன. (ஐ)

## யாழ்.பல்கலை கலைப்பீட மாணவிகளுக்கு நபர் ஒருவர் தொலைபேசியில் தொல்லை!

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு!

யாழ்ப்பாணம், ஓக. 17

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவிகளுக்குத் தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆபாசமாக உரையாடும் இனந்தெரியாத நபர் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

0742345913 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து அண்மையில் அழைப்பு மேற்கொண்டு ஆபாசமான முறையில் பேசியதாக மாணவிகளின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வேறு தொலைபேசி இலக்கங்களிலிருந்தும் தொடர்ச்சியாக இவ்வாறான அழைப்புக்கள் பல்கலைக்கழக மாணவிகளுக்கு வருகின்றன எனவும், அவர்கள் மிரட்டப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் உரிய முறையில் கவனம் செலுத்தவில்லை என்று மாணவிகள் தரப்பில் ஆதங்கம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளும் சூழல் உருவானது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

(அ)

ஈழநாடு
Eelanadu
17.08.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஆவணி 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# சீன விவகாரம்?

சர்ச்சைக்குரிய சீனாவின் உளவுக் கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருக்கின்றது. இது தொடர்பில் இந்தியா மற்றும் அமெரிக்கா சில அழுத்தங்களைப் பிரயோகித்தபோதிலும்கூட, கப்பலின் வரவை தடுக்க முடியவில்லை. கப்பலுக்கான அனுமதி ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டது என்னும் அடிப்படையிலேயே தற்போது கப்பல் இலங்கைக்குள் பிரவேசித்திருக்கின்றது.

சீனக் கடற்படையின் கப்பல், செயற்கை கோள் மற்றும் நீர்மூழ்கிகளின் நகர்வுகளை கண்காணிக்கும் வல்லமை கொண்டது என்னும் அடிப்படையில குறித்த கப்பல், இந்தியாவுக்கு அருகில் தரித்து நிற்பதானது அதன் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக நோக்கப்படுகின்றது. இவ்வாறானதொரு பொதுவான பார்வை இருந்தபோதிலும்கூட, இந்தியா இவ்வாறான நகர்வுகளைக் கண்டு பெரியளவில் அச்சப்படுவதாகவும் இல்லை. அவ்வாறானதொரு சூழல் இருந்திருக்குமாக இருந்தால் இந்தியாவின் அணுகுமுறைகள் வேறு விதமாகவே இருந்திருக்கும்.

இந்தியா பொதுவாகவே, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலுள்ள புவியியல் அருகாமையை வாய்ப்பாகக் கருதுகின்றது. இவ்வாறான வாய்ப்பு சீனாவுக்கு இல்லை. இந்தியாவை அதிகம் பகைத்துக் கொண்டு செயல்பட முடியாதென்னும் நோக்கிலேயே சீனாவும் அதன் செயல்பாடுகளை நன்கு திட்டமிட்டு முன்னெடுக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில்தான் சீனாவுக்கும் கொழும்புக்குமான உறவு முன்னர் எப்போதுமில்லாதவாறு வலுவடைந்தது. இந்த அடிப்படையில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவே பிரதான காரணமாவார். இதற்கு விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தமே பிரதான காரணமாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின்போது, இந்தியா ஆயுத உதவிகளை செய்ய மறுத்துவிட்டது. மனித உரிமை காரணங்களை முன்வைத்து அமெரிக்காவும் மறுத்துவிட்டது. இந்த இடத்தையே சீனா கச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டது. ஒருவேளை இந்தியா இறுதி யுத்தத்துக்கு பெருமளவில் ஆயுத உதவிகளை வழங்கியிருந்தால் சீனா இந்தளவுக்கு இலங்கைக்குள் காலூன்ற முடியாமல் போயிருக்கும்.

ஆட்சி மாற்றத்தின் மூலம் சீனா ஓர் எல்லைக்குள் முடங்கிவிட முடியுமென்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும்கூட அப்படி நிகழவில்லை. ரணில் - மைத்திரி ஆட்சியின் ஆரம்பத்தில், சீனாவின் திட்டங்களை மீள்பரிசீலனை செய்யப் போவதாகக் கூறியபோதிலும்கூட அது நடக்கவில்லை. அதற்கு மாறாக, அம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருட குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கப்பட்டது. இது பாரதூரமான மூலோபாய தவறாக நோக்கப்பட்டது. ஆனால், கொழும்பின் பக்கத்திலோ இது தொடரபில் இந்தியாவுக்கு அறிவுறுத்திய போதிலும் அவர்கள் அதிகம் ஆர்வம் காண்பிக்கவில்லை. இந்த நிலையில், சீனாவின் கடன்களை திரும்பிச் செலுத்த முடியாத நிலையில், துறைமுகத்தை சீனாவுக்கு வழங்க வேண்டியேற்பட்டதாகக் கூறுகின்றனர். ஆனால், இதுவே தற்போது வேறு வகையான நெருக்கடியாக மாறியிருக்கின்றது. 99 வருட குத்தகை என்பதால், துறைமுகத்தின் கட்டுப்பாடு வெளியில் சொல்லப்படுவது போன்று இலங்கையின் கட்டுப்பாட்டில் இல்லை.

2014இல் சீனாவின் நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டன. இதனை இந்தியா கடுமையாக ஆட்சேபித்திருந்தது. 2015இல் ஆட்சி மாறியது. இந்தியாவின்மீதே ராஜபக்ஷ குற்றம் சாட்டியிருந்தார். புவிசார் அரசியல் போட்டிகளால் ஏற்படும் நெருக்கடிகளின் விளைவாக ஆட்சி மாற்றங்கள் அடிக்கடி நிகழக்கூடிய சூழல் காணப்படுகின்றது. ஆனால், ஆட்சி மாற்றங்களின் மூலம் மட்டுமே இந்தியாவின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திவிட முடியுமா என்னும் கேள்வியுமுண்டு. ஆனால், சீன விவகாரம் ஏதோவொரு வகையில் இலங்கையின் அரசியலில் ஒரு தவிர்க்க முடியாத தொந்தரவாக தொடரத்தான் போகின்றது. இதனை கொழும்பு எவ்வாறு கையாளப் போகின்றது என்பதில்தான் இலங்கையின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படப் போகின்றது.

# சீனாவின் யுவான் வாங் - 5 இந்தியாவின் டோனியர் -228!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கையின் தென் அந்தத்திலுள்ள சீனாவால் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் வான்வெளி ஆய்வுக்கப்பலான யுவான் வாங்-5 நேற்றைய தினம் காலை வந்தடைந்தது.*

*ஒரு வெளிநாட்டு கப்பல், குறிப்பாக சரக்குக் கப்பல்கள் தவிர்ந்த கடற்படை மற்றும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் விதத்தில் வந்தடைகின்ற கப்பல்களை சம்பிரதாயபூர்வ மரியாதைகளோடு துறைமுகங்கள் வரவேற்பது வழக்கமாகும்.*

*நேற்றைய தினம் காலை 7.30 மணிக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்த சீனாவின் வான்வெளி ஆய்வுக் கப்பலுக்கு சம்பிரதாயபூர்வ வரவேற்பு வழங்கப்பட்டது.*

*சீனக் கப்பல் யுவான் வாங்-5 இலங்கை நோக்கி நகர ஆரம்பித்ததிலிருந்து இந்தியா தனது கரிசனையை வெளியிட்ட வண்ணமிருந்தது. ஒரு வாரத்துக்கு முன்னர் இந்தியாவிடமிருந்து ஏற்படக்கூடிய அழுத்தங்களை சமாளிக்கும் விதத்தில் இலங்கை அரசு சீனாவிடம் யுவான் வாங்-5 கப்பலின் அம்பாந்தோட்டை வருகையை பிற்போடுமாறும் கோரிக்கை விடுத்திருந்தது.*

*ஆனால், நாளடைவில் தனது முடிவை மாற்றி சீன ஆய்வுக் கப்பல் யுவான் வாங்-5 அம்பாந்தோட்டை துறைமுகம் வருவதற்கு இலங்கை அரசு அனுமதி அளித்திருந்தது. நேற்றைய தினம் இலங்கையின் சிறப்புரிமை கொண்ட பொருளாதார தனியுரிமையுடைய கடல் வலயம் ஊடாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனக்கப்பல் வந்தடைந்திருந்தது.*

*இலங்கையைப் பொறுத்தவரை அதன் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட வேண்டிய கௌரவப் பிரச்னை ஒருபுறமிருக்க, யுவான் வாங்-5 கப்பல் தொடர்பில் இராஜதந்திர ரீதியாக சீனாவையும் இந்தியா வையும் மிக அவதானத்தோடு கையாள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் இலங்கை உள்ளாகியிருந்தது.*

*அண்மைக்காலமாக இலங்கை எதிர்நோக்கி வருகின்ற பொருளாதார நெருக்கடியைக் கையாள இந்தியா ஒரு பில்லியன் டொலர்கள் வரை இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளது. இதேவேளை, சீனாவும் இலங்கைக்கு கடந்த சில வருடங்களாகவே பொருளாதார ரீதியான உதவிகளை வழங்கி வருகின்றது.*

*சீனக் கப்பல் யுவான் வாங்-5 வருகை குறித்து பொருளியல் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகையில் சீனாவிடமிருந்து பெற்ற கடனை திரும்ப செலுத்துவதற்கான கால எல்லையை நீடிக்கச்செய்யும் விதத்திலும் இராஜதந்திர ரீதியில் சீனாவை பகைத்துக் கொள்ளாதிருக்கும் விதத்திலுமே சீன ஆய்வுக்கப்பலுக்கு இலங்கை அனுமதி அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இந்திய வெளிவிவகாரத்துறைக்கு இலங்கை அரசு அறிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதனையடுத்தே இலங்கையின் கடலாதிக்கத்துக்கு உட்பட்ட பிரத்தியேக பொருளாதார தனியுரிமை வலயம் ஊடாக சீன ஆய்வுக்கப்பல் யுவான் வாங்-5 அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்திருந்தது.*

*சீனக்கப்பல் யுவான் வாங்-5 குறித்து இந்தியா தனது கரிசனையை ஆரம்பத்தில் வெளியிட்டிருந்தது. இருந்தபோதிலும் பின்னர் இவ்விடயம் தொடர்பாக பிராந்திய ரீதியாக ஒரு வல்லரசுப் போட்டியில் இலங்கையை பகடைக்காயாக இந்தியா பாவிக்க விரும்பாதிருந்ததையே அவதானிக்க முடிந்தது.*

*இதன்வெளிப்பாடாகவே இலங்கைக்கு டோனியர்-228 என்ற ரகத்தைச் சேர்ந்த வான் பரப்பினூடாக கடல் மற்றும் தரைப்பகுதிகளை கண்காணிக்கும் ரோந்து விமானம் ஒன்றை இந்தியா வழங்கியுள்ளது.*

*இந்தியாவின் டோனியர் விமானங்கள் இந்திய கடலோர பாதுகாப்பு படைப் பிரிவினரின் பாவனையிலிருந்து வருகின்றன. நேற்று முன்தினம் டோனியர்- 228 ரோந்து விமானம் இந்தியாவிலிருந்து இலங்கை வந்தடைந்திருந்தது. இந்த விமானத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொறுப்பேற்றிருந்தார்.*


*இலங்கையின் கடல் வழிப்பாதைகள் போதைவஸ்துக் கடத்தல் மற்றும் வெளிநாடுகளுக்கு ஆட்கடத்தல் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு பெருமளவில் அண்மைக் காலங்களில் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாகவே இலங்கைக்கு டோனியர்-228 ரக ரோந்து விமானத்தை இந்தியா வழங்கியுள்ளது.*

*இந்தியா அன்பளிப்புச் செய்த டோனியர்-228 ரக ரோந்து விமானம் சீனக்கப்பல் இலங்கையின் கடல் வலயத்துக்குள் பிரவேசித்துள்ள தருணத்திலேயே இலங்கை வந்தடைந்துள்ளது.*

*இலங்கையின் கிழக்குப் பிரந்தியமே சீனாவின் ஆய்வுக் கப்பலின் வருகை மற்றும் தற்போது சீனாவின் வல்லாதிக்க விஸ்தரிப்பு என்பவற்றை எதிர்கொண்ட வங்காள விரிகுடாவை உள்ளடக்கிய கடல் வலயமாக இருக்கின்றது.*

*இந்நிலையில், மூன்று தசாப்தகால உள்நாட்டு யுத்தத்தின் சவால்களை எதிர்கொண்ட இலங்கை தற்போது அந்த மூன்று தசாப்த காலத்தில் இராணுவ மற்றும் பொருளாதார வல்லரசுகளாக மாற்றம் கண்டுள்ள இந்தியா மற்றும் சீனா என்பவற்றின் வல்லாதிக்க கெடுபிடிகளினால் எழக்கூடிய சவால்களுக்கும் முகங்கொடுக்க வேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஓகஸ்ட் - 16 புதன்கிழமை
சுபகிருது வருடம் - ஆவணி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : சூன்ய




**மேடம்**
வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பயணத்தால் நன்மை ஏற்படும். அரசுவழி முயற்சியில் இழுபறி ஏற்பட்டாலும் போராடி முடிப்பீர்கள். விழிப்புணர்வான நாள். நண்பர்களால் செலவு ஏற்படும்.

**இடபம்**
செயல்களில் வெற்றி காண்பீர்கள். பணவரவு திருப்தியாக இருக்கும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்று உங்களை வந்து சேரும். எதிரி விலகிச் செல்வார். உங்களின் திறமை இன்று வெளிப்படும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். உங்கள் செயல்பாடு வெற்றியாகும். தொழிலில் போட்டியாளர் விலகுவார்கள். சிந்தனை மேலோங்கும். பணவரவு குடும்பத்தில் மகிழ்ச்சியை உண்டாகும்.

**கடகம்**
செயல்களில் இழுபறி இருக்கும். தந்தை வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். போட்டிகளில் வெற்றி பெறுவீர். உடல் நிலையில் இருந்த பாதிப்பு விலகும். உங்களுடைய எண்ணம் நிறைவேறும்.

**சிம்மம்**
எதிரிகளால் மனச்சங்கடம், செயல்களில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள். எதிலும் நிதானமாக செயல்படுவதால் நன்மை உண்டு. முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். மனஎழுச்சி உண்டாகும்.

**கன்னி**
விலகியவர்கள் மீண்டும் வருவார்கள். உங்களுடைய அணுகுமுறையால் நீங்கள் ஈடுபடும் செயலில் ஆதாயம் காண்பீர்கள். இழுபறியாக இருந்து வந்த பிரச்னை முடிவிற்கு வரும்.

**துலாம்**
தொழிலில் உண்டான நெருக்கடி விலகும். அதிகமாக யாரையும் நம்ப வேண்டாம். புதிய செயல் மனநிம்மதிக்கு வழிவகுக்கும். நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். உறவினர்களால் நன்மை உண்டு.

**விருட்சிகம்**
நெருக்கமானவர்களால் சிறு சங்கடம் ஏற்பட்டு சரியாகும். எதிர்காலம் பற்றி யோசிப்பீர்கள். புதிய செயல் இழுபறியாகும். நினைத்தது ஒன்று நடப்பது ஒன்றாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு**
தேவையற்ற பயம் வந்து போகும். அரசு வழியில் கூடுதல் கவனம் தேவைப்படும். நெருக்கமானவர்களின் ஆதரவினால் உங்களுடைய விருப்பம் நிறைவேறும். எச்சரிக்கை தேவை.


**மகரம்**
இழுபறியாக இருந்த செயல் இன்று நிறைவேறும். தொழிலில் கணிசமான லாபம் காண்பீர்கள். உயர்ந்தோரின் நட்பினால் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். அரசு வழியில் நன்மை உண்டு.

**கும்பம்**
பேச்சில் நிதானம் தேவை. கவனக்குறைவால் நஷ்டங்களை சந்திக்கலாம். பிறருக்கு ஆதரவு கொடுப்பதால் அவமானம் ஏற்படும். செயல்களில் சிறு சங்கடம் வரும். வார்த்தைகளில் கவனம் தேவை.

**மீனம்**
உங்கள் மனம் அலைபாயும். ஒரு செயலில் முடிவிற்கு வராமல் குழப்பமடைவீர்கள். உங்கள் தொழிலில் கூடுதல் கவனம் தேவை. யாரிடமும் எதனையும் எதிர் பார்க்காதீர்கள். பிறரால் நெருக்கடிகளை சந்திக்க வேண்டி இருக்கும்.

# அதானி குழுமத்துக்கு தமிழக அரசு ஆதரவாக நிற்கிறது

### சீமான் குற்றச்சாட்டு



சென்னை, ஒக. 17

"கொற்றலை ஆற்றைக் காக்க ஆந்திர அரசுக்குக் கடிதம் எழுதிய தமிழக முதல்வர் ஸ்டாலின் அதே அக்கறையோடு, தமிழக நிலப்பகுதியில் கொற்றலை ஆற்றின் நடுவே மின்கோபுரங்கள் அமைக்கும் முடிவைக் கைவிடுவதோடு, அதானி குழுமத்தின் காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கத்துக்கு எதிராகக் கொள்கை முடிவெடுத்து அறிவிக்க வேண்டும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கொற்றலை ஆற்றின் குறுக்கே, இரண்டு இடங்களில் அணைகட்டி, தமிழகத்திற்கு வரவேண்டிய நீர்வளத்தைத் தடுக்க முயலும் ஆந்திர அரசின் செயல்பாட்டைக் கண்டித்து தமிழக அரசு கடிதமெழுதித் தனது எதிர்ப்பைப் பதிவுசெய்திருப்பதை முழுமையாக வரவேற்கிறேன். அயல் மாநிலத்துக்குச் சென்று சேர வேண்டிய நீர்வளத்தை, அணைகட்டி தடுக்க முயல்வது என்பது நீரியல் கோட்பாட்டு விதிகளுக்கு முற்றிலும் எதிரானது. அதனை வலியுறுத்தி ஆந்திர அரசின் வஞ்சகச் செயல்பாட்டை முறியடிக்க வேண்டுமென தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேசமயம், தமிழக நிலப்பகுதியிலுள்ள கொற்றலை ஆற்றைப் பாதிக்கும் வகையில் சென்னை அருகே காட்டுப்பள்ளியில் 6,110 ஏக்கர் அளவுக்கு நடைபெறும் அதானி குழுமத்தின் துறைமுக விரிவாக்கப் பணிகளுக்கெதிராக தமிழக அரசு வாய்திறக்க மறுப்பதேன்?

அப்பகுதியில், துறைமுகம் விரிவாக்கம் செய்யப்படும்பட்சத்தில், கொற்றலை ஆறு மொத்தமாகக் கடலோடு கலந்துவிடும் பேராபத்து நிகழுமெனவும், சென்னை மற்றும் திருவள்ளூரைச் சேர்ந்த 35 இலட்சம் மக்கள் வெள்ளத்தில் சிக்கி, சூழலியல் அகதிகளாக மாறக்கூடும் எனவும் ஆய்வாளர்கள் எச்சரித்தும் தி. மு. க. அரசு அதுகுறித்து எவ்வித அக்கறையும் காட்டாதிருப்பதேன்?

மத்தியில் ஆளும் பா. ஜ. க. அரசு, அதானிக்குச் சாதகமாக நடந்துகொள்ளும்போது அவற்றைக் கேள்விக்குள்ளாக்கும் தி. மு. க. அரசு, காட்டுப்பள்ளி துறைமுக விரிவாக்கத் திட்டத்தில் அதானிக்கு ஆதரவாக நிற்பது சந்தர்ப்பவாதம் இல்லையா? ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு? - என்றுள்ளது. (ஐ)

# விஜயகாந்த் நீண்ட நாட்களின் பின் கட்சி தொண்டர்களை சந்தித்தார்!

சென்னை, ஒக. 18

தே. மு. தி. க. தலைவர் விஜயகாந்த், நீண்ட நாட்களுக்குப் பிறகு கட்சி அலுவலகத்தில் தொண்டர்களை சந்தித்தார்.

விஜயகாந்த் உடல்நலக் குறைவுக்காக வீட்டில் இருந்து சிகிச்சை பெற்று வருகிறார். இதனால், கட்சி சார்ந்த நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் இந்திய சுதந்திர தினம் கட்சி தலைமையகத்தில் கொண்டாடப்பட்டது. இதில் விஜயகாந்த் பங்கேற்றார்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு கட்சி அலுவலகத்துக்கு வந்த விஜயகாந்தைப் பார்த்ததும் தொண்டர்கள் உற்சாகம் அடைந்தனர். அலுவலக வாயிலில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். 'கப்டன்.. கப்டன்' என்று கோஷமிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

# சசிகலா, தினகரனை அ. தி. மு.கவில் சேர்க்க ஒருபோதும் வாய்ப்பில்லை!

### முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



சென்னை, ஒக. 17

"நாங்கள் அ. தி. மு. கவை விமர்சிக்கவில்லை. அதனால் அ. தி. மு. கவுடன் ஒருங்கிணைந்து செல்வோம் என்று அவர்கள் நினைக்கலாம். ஆனால், எங்கள் கட்சியில் உள்ள தொண்டர்களும் சரி, கட்சியினரும் சரி, யாருமே சசிகலாவையும், தினகரனையும் ஏற்றுக்கொள்வதாக இல்லை" என்று ஜெயக்குமார் கூறியுள்ளார்.

சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பலமுறை நாங்கள் கூறிவிட்டோம். அ. தி. மு. கவில், சசிகலா மற்றும் டி. டி. வி. தினகரனை சேர்ப்பதற்கு வாய்ப்பே இல்லை. நூறு அல்ல, இலட்சம் அல்ல, கோடி சதவீதம் கூட வாய்ப்பே இல்லை -அவ்வாறு நடப்பதற்கு வாய்ப்பே இல்லை.

இரட்டை இலையை எதிர்த்து தேர்தலில் நின்று, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் அரசையே கவிழ்க்க நினைத்தவர்கள் அவர்கள். இன்றைக்கு பாசாங்கு செய்வது போல, அதாவது பசுத்தோல் போர்த்திய நரிதான் என்று சொல்வேன் - புலி யென்றுகூட சொல்லமாட்டேன் - என்றார். (ஐ)

# விஜய்க்கு அபராதம் நீதிமன்று இடைதடை!

சென்னை, ஒக. 17

"புலி" திரைப்படத்துக்கு பெற்ற 15 கோடி ரூபாய் சம்பளத்தை மறைத்தார் என்று கூறி நடிகர் விஜய்க்கு 1.50 கோடி ரூபாய் அபராதம் விதித்த வருமான வரித்துறை உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2016-17 நிதியாண்டுக்கான வருமான வரி கணக்கை நடிகர் விஜய் தாக்கல் செய்த போது, அந்த ஆண்டுக்கான வருமானமாக 35 கோடியே 42 லட்சத்து 91 ஆயிரத்து 890 (இந்திய) ரூபாய் பெற்றதாக குறிப்பிட்டிருந்தார்.

அந்த ஆண்டுக்கான மதிப்பீட்டு நடவடிக்கையை மேற்கொண்ட வருமான வரித்துறை, நடிகர் விஜய் வீட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு நடத்திய சோதனையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்தது. அதன்படி, புலி படத்துக்குப் பெற்ற 15 கோடி ரூபாய் வருமானத்தை கணக்கில் காட்டவில்லை எனக் கண்டறிந்தது.

வருமானத்தை மறைத்ததற்காக ரூ.1.50 கோடி அபராதம் விதித்து கடந்த ஜூன் 30ஆம் திகதி வருமான வரித்துறை உத்தரவு பிறப்பித்தது. (ஐ)

# இடைக்கால பட்ஜெட் 30 ஆம் திகதி வரும்!

கொழும்பு, ஓக. 17

இந்த வருடத்தின் மீதமான நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம் இம்மாதம் 30 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

அதேவேளை மேற்படி இடைக்கால வரவுசெலவுத் திட்டம் தொடர்பில் அரசாங் கத்தின் செலவினம் உள்ளிட்ட 30 ஆம் இலக்க குறைநிரப்பு பிரேரணை கடந்த 9 ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தன வினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த குறைநிரப்பு பிரேர ணையில் 3275 பில்லியன் ரூபா அரச செலவினமாகவும் ஜனா திபதி, பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள நிதி தொடர்பிலும் அந்த குறைநிரப்பு பிரேரணையில் உள்ளடக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# எரிபொருள் விலைகளில் எந்த மாற்றமும் இல்லை!

## அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக. 17

விலை சூத்திரத்தின் அடிப் படையில் எரிபொருள் விலை களில் எந்தவொரு மாற்றத்தி னையும் ஏற்படுத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு மாதமும் முத லாம் மற்றும் 15 ஆம் திகதிக ளில் எரிபொருள் விலை திருத் தம் மேற்கொள்ளப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

இதன்படி, எரிபொருள் விலை திருத்தம் நேற்று இரவு மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதும், இந்த விடயம் தொடர்பில் எவ்வித அறிவிப்புகளும் விடுக் கப்படவில்லை.

இதனிடையே, சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை மிகவும் குறைவடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதன்படி, டபிள்யூ.ரி.ஐ. தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 88 தசம் 42 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது.

அத்துடன், பிரண்ட் தர மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 93 தசம் 91 அமெரிக்க டொலராகவும் பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலி கிரிப்டோ கரன்சி மோசடியில் சிக்கிப் பாதிப்புற்ற இலங்கையர்கள்!

## மில்லியன் கணக்கில் இழப்பு என்கிறது அல்ஜெசீரா ஊடகம்

லண்டன், ஓக. 17

**போலியான கிரிப்டோ கரன்சி முதலீட்டுத் திட்டத்தின் பேரில் பெரும் மோசடி நடந்துள்ளது என்றும் அதனால் நூற்றுக்கணக்கான இலங்கை முதலீட்டாளர்கள் மில்லியன் கணக்கான ரூபாய்களை இழந்துள்ளனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.**

கிரிப்டோகரன்சி டிஜிட்டல் நாணய முதலீட்டுத் திட்டம் சர்வதேச அளவில் பிரபல மடைந்து வருகிறது.

அதேசமயம் அதில் போலி யான முதலீட்டு மோசடிகளும் அதிகரித்து வருகின்றன.

அத்தகைய ஒரு மோசடியில் பெரும் எண்ணிக்கையில் பாதிக் கப்பட்ட இலங்கையர்கள் தொடர்பான பல தகவல்களை அல்ஜெசீரா செய்தி ஊடகம் பாதிக்கப்பட்டவர்களது செவ் விகளோடு வெளியிட்டுள்ளது.

மருத்துவர்கள் முதல் பாது காப்புப் படைகளைச் சேர்ந் தோர், நடுத்தர வர்க்கத்துக்கும் குறைந்த வருமானம் பெறு கின்ற கிராமவாசிகள் வரை பல தரப்பட்டவர்களும் பெரும் ஆதாயம் பெறும் நோக்கில் தங்கள் சொத்துக்களை விற்று அந்தப் பணத்தை கிரிப்டோ கரன்சியில் முதலிட்டுள்ளனர். தென் கொரியா, இத்தாலி, ஜப்பான் போன்ற நாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கை யர்களே அதிக அளவில் இந்த மோசடி முதலீட்டுத் திட்டத் தில் பணத்தை இழந்துள்ளனர் என்பதை அல்ஜெசீரா வெளிப் படுத்தியுள்ளது.



இலங்கையில் பெரும் பொருளாதார நிதி நெருக்கடி நிலை தோன்றியதால் வங்கிகள் வங்குரோத்தாகும் கட்டம் வர லாம் என்று அஞ்சிய பலரும் வங்கிகளில் சேமித்து வைத்தி ருந்த பணத்தை மீளப் பெற்று அதனை கிரிப்டோகரன்சியில் முதலீட்டுப் பெரும் ஏமாற்றத் தைச் சந்தித்துள்ளனர்.

2020 இல் "ஸ்போர்ட்ஸ் செயின்" என்ற பெயரில் கிரிப் டோகரன்சி என்று கூறித் திட் டம் ஒன்றை அறிமுகப்படுத்திய இலங்கை மற்றும் சீனா பிர ஜைகள் இருவர் தங்களைச் சீன முதலீட்டாளர்களாக அறிமுகப் படுத்திக் கொண்டு நாட்டில் இயங்க அனுமதிக்கப்பட்டனர் என்பதை இலங்கை அரசின் அதிகாரபூர்வ ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் கிரிப்டோகரன்சி சொத்துக் களைக் கண்காணிக் கின்ற கொய்ன்மார்க்கெட்கப் என்ற இணையத் தளம், "ஸ்போர்ட்ஸ் செயின்" என்ற பெயரில் கிறிப்டோகரன்சி எதுவும் பதிவு செய்யப்படவோ அல்லது வர்த் தகத்தில் ஈடுபடவோ இல்லை என்பதை உறுதி செய்துள்ளது.

-இத்தகவல்களை அல் ஜெசீரா வெளியிட்டுள்ளது.(அ)

# சுற்றறிக்கைக்கு அப்பாற்பட்ட செலவை பொறுப்பான அலுவலரே ஏற்கவேண்டும்



## அரச நிறுவன தலைவர்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஓக. 17

திறைசேரியின் செயலாளரி னால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அப்பாற்பட்ட செலவுகள் மேற்கொள்ளப்படு மாயின், அதற்கான செலவு களை பொறுப்பான உத்தியோ கத்தர்கள் தனிப்பட்ட முறை யில் ஏற்றுக்கொள்ளவேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள் ளார்.

இது தொடர்பில் ஜனா திபதி ஊடகப் பிரிவு விடுத் துள்ள அறிக்கையில்-

அரசாங்க செலவினங்க ளைக் கட்டுப்படுத்துவதற்காக திறைசேரியின் செயலாளரி னால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அப்பாற்பட்ட செலவுகள் மேற்கொள்ளப்படு மாயின், அதற்கான செலவு களை பொறுப்பான உத்தியோ கத்தர்கள் தனிப்பட்ட முறை யில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி அறிவித்துள் ளார்.

திறைசேரி செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள "பொது செலவினங்களைக் கட்டுப்படுத் துதல்" என்ற சுற்றறிக்கையின் விதிகளை அனைத்து அரச நிறு வனங்களின் தலைவர்களும் கட் டாயமாக நிறைவேற்ற வேண் டும் என ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்-என்றுள்ளது. (அ)

இலங்கை வங்கியின்
200 நாட்கள்
நிலையான வைப்புக்கு
22.5% (வ.வ) வரை
23.75% (வ.உ.வ)
அதிக வட்டி



பணத்தைப் பெருக்குங்கள்
200 நாள் நிலையான வைப்பு

500,000/- ரூபாயால் ஆரம்பிக்கப்படும் 200 நாட்கள் நிலையான வைப்பு

The Banker Bank of the Year 2021 SRI LANKA

- சந்தைப் பெறுமதியிலும் அதிக வட்டியோடு பல நன்மைகள்
- அதிஉயர் நம்பிக்கையும் பாதுகாப்பும்

| வைப்பின் பெறுமதி (ரூ.) | காலஎல்லை (நாட்கள்) | வட்டிவீதம் (வ.வ) | வ.உ.வ |
|---|---|---|---|
| 500,000 - 1,499,999 | 200 | 20.5% | 21.54% |
| 1,500,000 - 2,499,999 | | 21.5% | 22.65% |
| 2,500,000 அல்லது அதற்கு மேல் | | 22.5% | 23.75% |

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையிலிருந்து அல்லது 1975 க்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.

1975 BOC CALL CENTRE
www.boc.lk

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.


இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# கடந்த காலத்திலிருந்து ரணில் எதுவும் கற்றுக்கொள்ளவில்லை

## பழையவர்களே சுற்றியிருக்கிறார்கள் என்கிறார் ஓமல்பே சோபித தேரர்

**கொழும்பு, ஓக. 17**

**தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மக்கள் போராட்டத்தின் மூலம் ஜனாதிபதி பதவியை அடைந்தவர். ஆனால், அவர் கடந்த காலத்திலிருந்து எதையும் கற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.**



இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,

தேசிய சொத்துக்களை அபகரித்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் ஊழல்வாதிகளை அமைச்சர்களாக நியமிக்கக்கூடாது.

புதிய நடைமுறைகளுக்குப் பதிலாக, ஜனாதிபதி பழைய நடைமுறைகளைத் தொடர்வதாகக் காணப்படுகிறது. அவர் தனது பழைய அமைச்சர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவுடன் இதே சுயநலம் மற்றும் மனிதாபிமானமற்ற அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்கிறார்.

எனவே, பழைய நடைமுறைகளை கைவிட்டு, திருடர்களை தண்டித்து, நாட்டின் தேசிய செல்வத்தை திருடியவர்களிடம் இருந்து மீட்க வேண்டும் என அவருக்கு கடுமையாக அறிவுறுத்துகிறோம்-என்றார். (அ)

# பிள்ளைக்காக பால் ரின் திருடியவர் கைதாகினார்!

கொழும்பு, ஓக. 17

குழந்தைக்கு உணவில்லாததால் பல்பொருள் அங்காடியில் பால் ரின் திருடியவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அளுத்கம பகுதிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு நீடிக்கிறது. குறிப்பாக மண்ணெண்ணெய் விநியோகம் பல மாதங்களாக சிக்கலான நிலைமையில் உள்ளது. இதனால் மீனவர்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாகி வருகிறார்கள்.

இந்த நிலையில், 30 வயதான மீனவர் ஒருவரே பிள்ளைக்காக பால் ரின் திருடி கைதாகியுள்ளார்.

அவருக்கு 2 பிள்ளைகள். இளைய பிள்ளை ஒன்றரை வயதுடையவர்.

பல்பொருள் அங்காடியில் 3,100 ரூபா பெறுமதியான பால் ரின் ஒன்றை திருடியுள்ளார். நிறுவன ஊழியர் மூலம் கைதான சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# சாரதி அனுமதிப்பத்திர கட்டணத்திலும் திருத்தம்!

கொழும்பு, ஓக. 17

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சாரதி அனுமதிப்பத்திரத்துக்கு விண்ணப்பிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் காலங்களில் சாரதி உரிமம் உள்ளிட்ட அனைத்து கட்டணங்களையும் திருத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அனுமதி கோரியுள்ளது.

அந்த வகையில் 2009ஆம் ஆண்டு இறுதியாக திருத்தம் செய்யப்பட்டு 13 வருடங்களின் பின்னர் இந்தக் கட்டணங்களுக்கான திருத்தங்கள் இடம்பெறவுள்ளதோடு இது விரைவில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் வசந்த என். ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இப்பொழுது புதிய சாரதி உரிமத்துக்கு ரூ.1, 700 மற்றும் சாரதி உரிமம் புதுப்பிக்காமைக்கு ஆண்டுக்கு ரூ.250 அபராதம் மட்டுமே அறவிடப்படுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# பாலியல் குற்றச்சாட்டில் காலியில் சிக்கிய மதகுரு

## கைதாவதிலிருந்து தப்பிக்க பொலிஸாருக்கு ரூ.10 கோடி வரை இலஞ்சம் கொடுக்க முயற்சி

கொழும்பு, ஓக. 17

பாடசாலைச் சிறார்களை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி, அதை காணொளியாக படம் பிடித்து விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில், காலி, உனவடுன, மாதரம்ப பகுதியில் கைது செய்யப்பட்டுள்ள மதகுரு, தான் கைது செய்யப்படுவதை தடுக்க ரூ.10 கோடி வரை இலஞ்சம் கொடுக்க முன்வந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வளவு பெரிய தொகையை லஞ்சமாக கொடுக்கவும், அவரிடம் கோடிக்கணக்கான ரூபா பணம், சொத்துக்கள் எவ்வாறு கிடைத்தன என்றும் அறிய, சட்டவிரோத சொத்துக் குற்ற விசாரணைப் பிரிவினர் விரிவான விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலஞ்சத்தை ஏற்காமல், அழுத்தமின்றி இரகசியப் பொலிஸார் செயற்பட்ட விதம் பாராட்டுக்குரியது எனவும், சந்தேகத்திற்குரிய மதகுரு கைது செய்யப்பட்டதன் பின்னர் அவர் இரகசியமாகச் சம்பாதித்துள்ள சொத்துக்கள் தொடர்பிலும் பொதுமக்கள் தொடர்ந்து தகவல்களை வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்கது என்றும் பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் சந்தேகநபரான மதகுரு பயன்படுத்திய பல கையடக்கத் தொலை



பேசிகள் உள்ளதாகவும், டிஜிற்றல் தடயவியல் கணினிப் பிரிவு அந்த தொலைபேசிகளின் தரவுகளைக் கண்காணித்து வருவதாகவும், அந்தத் தரவுகளின் அடிப்படையில் அவருடன் தொடர்பில் இருந்த உயர் பொலிஸ் அதிகாரிகளின் பட்டியல் தெரியவரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காலி பிரதேசத்தில் பணிபுரியும் உயர் பொலிஸ் அதிகாரிகளும், காலி பிரதேசத்தில் இருந்து இடமாற்றம் பெற்று, பதவி உயர்வு பெற்று வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்ட அதிகாரிகளும் மதகுருவுடன் தொடர்பில் இருந்ததாக சந்தேகிக்கப்படுகின்றது.

மேலும் இந்த கோவிலுக்கு சில காலமாக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், காரணமின்றி வழங்கப்பட்ட பாதுகாப்பு குறித்தும் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு பிரதேசத்தில் மதகுருவினால் கொள்வனவு செய்யப்பட்ட பல சொகுசு அடுக்குமாடி குடியிருப்புக்கள் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதுடன், அவ்வாறான வீடுகளை கொள்வனவு செய்வதற்கு பெருந்தொகை பணத்தை எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்றும், வெளிநாடுகளில் உள்ளவர்களுடன் அவர் மேற்கொண்ட பரிவர்த்தனைகள் குறித்தும் ஆராய்வதாகவும் அவர் கூறினார். (அ)

# மொட்டு உறுப்பினர் கைது!

கொழும்பு, ஓக. 17

அளுத்கம களுவாமோதர முல்லப்பிட்டி வீதியில் விபத்தை ஏற்படுத்தி, 10 வயது சிறுவனைப் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கிய பேருவளை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர் ஒருவரை அளுத்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தலைமறைவாக இருந்ததாக அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் தனது சகோதரியுடன் வீட்டுக்கு அருகில் உள்ள கடைக்குச் சென்ற 10 வயது சிறுவன்,வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சிறுவன் பேருவளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் சிறுவனுக்கு கால் மற்றும் உடலில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

விபத்து இடம்பெற்ற நாளிலிருந்து சந்தேகநபரின் வீட்டுக்கு பல தடவைகள் சென்றிருந்தபோதிலும், அவர் காருடன் தலைமறைவாக இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்படும் வரை சந்தேகநபர் சரணடையத் தவறியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (அ)

# பியதிகமவில் துப்பாக்கி சூடு

கொழும்பு, ஓக. 17

ததல்ல-பியதிகமவில் துப்பாக்கிச் சூட்டு சம்பமொன்று பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிள் சென்ற துப்பாக்கிதாரிகள் இவ்வாறு துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

எனினும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூடு நடத்திய பின்னர் துப்பாக்கிதாரிகள் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுவிட்டனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# வரும் பொது தேர்தலில் போட்டியிடமாட்டேன்!

## கூறுகிறார் விமலவீர திசாநாயக்க

கொழும்பு, ஓக. 17

தாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவ கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது இறுதிக் கட்ட அரசியல் செயற்பாடுகளில் தாம் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதுமுக உறுப்பினர்களுக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் உரிய வகையில் நாட்டின் நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு-என்றார். (அ)

# மொட்டுக்குள் சதிகாரக் குழு!

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 17

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் சதிகாரக் குழுவொன்று இருப்பதாகவும், எனினும், பிளவு இல்லை எனவும் அந்த கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சியில் பிளவு இருப்பதாக கூறுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. ஆனால் கட்சியில் சிறு கும்பல் ஒன்று உள்ளது. அதில் வழி கெட்ட




குழுக்களும், சதிகாரக் குழுக்களும் இருக்கின்றன.

எனினும், அவர்களில் பலர் தற்போது மீண்டும் இணைந்து அரசியல் செய்ய எங்களுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர்.

இன்றும் எமது கட்சி இந்த நாட்டிலேயே அதிக உறுப்பினர்களையும் அமைப்பு பலத்தையும் கொண்ட வலுவான அரசியல் கட்சியாகும். எதிர்வரும் எந்தவொரு தேர்தலிலும் இந்த நாட்டிலுள்ள அனைத்துக் கட்சிகளையும் விட அதிக வெற்றியைப் பெறக்கூடிய ஒரே கட்சி இந்தக் கட்சிதான் என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்-என்றார். (அ)

## தையலகத்துக்குள் புகுந்து வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஒக. 17

பருத்தித்துறை நகரில் உள்ள தையலகத்தினுள் புகுந்த முகமூடி அணிந்த நபர்கள் அதனை அடித்து உடைத்ததுடன் அதன் உரிமையாளரை வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டுதப்பிச் சென்றுள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு 7:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மின்சாரம் தடைப்பட்டதைச் சாதகமாகப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த நபர்கள் இந்த வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

படுகாயமடைந்த 44 வயதான உரிமையாளர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.(அ)

## ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஒக. 17

இரத்மலான கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்மலான பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மீண்டும் கொரோனா அச்சுறுத்தல் சிறுவர்கள் தொடர்பில் அவதானம்

கொழும்பு, ஒக. 17

இலங்கையில் மீண்டும் கொரோனா தொற்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்-

பிள்ளைகளின் உடல்நிலை குறித்து பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது கொரோனா வைரசு தொற்றினால் பாதிக்கப்படுபவர்களுக்கு, முதல் இரண்டு நாட்களில் அதிக காய்ச்சல் காணப்படும். இதனால் விசேடமாக அவ்வாறு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று பொரளை லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்திய சாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பிள்ளைகளில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் தவிர டெங்கு மற்றும் இன்புளுவன்சா நோயாளர்களும் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த வாரத்தில் மூச்சுத் திணறல் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது-என்றுள்ளது. (அ)

## அதிக விலைக்கு தண்ணீர் போத்தல் விற்ற உணவகம் மீது நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஒக. 17

தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலு வல்கள் அதிகார சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.




நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றில் 35 ரூபாய் விற்பனை விலையாக பொறிக்கப்பட்ட தண்ணீர்ப் போத்தலை 70 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள், அதிக விலைக்கு தண்ணீர் போத்தலை விற்பனை செய்தமையை உறுதிப்படுத்தி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை, தண்ணீர் போத்தலை சான்று பொருட்களாக கைப்பற்றியுள்ளனர். அவற்றை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## இலங்கை அரசின் தடை நீக்கத்தை வரவேற்கும் கனேடிய தமிழர் பேரவை

மொன்றியல். ஒக. 17

புலம்பெயர் அமைப்புகள் சில தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதைக் கனேடிய தமிழர் பேரவை வரவேற்கிறது. ஆயினும் உறுதியான தொடர் நடவடிக்கைகளுக்கும் அது அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து கனேடிய தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

இலங்கையில் இன உறவுகள் மற்றும் பொருளாதார விளைவுகள் மேம்படும் வகையில் புதிய இலங்கை அரசாங்கத்தால் சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனி நபர்கள் தடைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதைக் கனடிய தமிழர் பேரவை வரவேற்கிறது.

எவ்வாறாயினும், ஒகஸ்ட் 1, 2022 அன்று வெளியிடப்பட்ட வர்த்த மானி அறிவித்தலில் பல தமிழ், முஸ்லிம் அமைப்புக்கள், தனிநபர்கள் இன்னும் தடைப் பட்டியலில் இருப்பது ஏமாற்றத்தை அளிக்கிறது.

தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்தல், வடக்கு மற்றும் கிழக்கில் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்துத் தனியார் காணிகளையும் விடுவித்தல், வடக்கு-கிழக்கை இராணுவமய மாக்கலில் இருந்து விடுவித்தல், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குதல் போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கத்தைக் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2021 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 46⁄1 தீர்மானத்திற்கு முழுமையாக இணங்குமாறும், தற்போதைய தீர்மானத்தின் அனைத்து அம்சங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து பணியாற்றுமாறும் இலங்கை அரசாங்கத்தைக் கனடிய தமிழர் பேரவை வலியுறுத்துகிறது-என்றுள்ளது. (அ)

## தரமான மதுபான உற்பத்திகளை அடையாளம் காண்பதற்கு செயலி

கொழும்பு, ஒக. 17

உள்ளூர் உற்பத்தியிலான தரம் வாய்ந்த மதுபான உற்பத்திகளை அடையாளம் காண்பதற்கு விசேட செயலி ஒன்றினை அறிமுகப்படுத்தவுள்ளதாக மதுவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.

மதுவரித்திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே. குணசிறி இதனை தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் 15 நாட்களுக்குள் குறித்த செயலியினை அறிமுகம் செய்யவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கணினிச் செயற்பாட்டு முறைமைக்கு அமைய உள்ளூர் மது உற்பத்திகள் விநியோகிக்கப்படவிருந்த நிலையில். தொழிநுட்க கோளாறுகள் காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி காரணமாக சந்தையில் போலியான மதுபானங்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்துவதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தேசிய மதுபான உற்பத்திகளுக்கு ஸ்ரிக்கர்களை காட்சிப்படுத்தும் முறைமை முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி கூறினார். (அ)

# பெரும் அச்சுறுத்தல்!

# ஒரு வாரம் நிற்கப்போகிறது சீன உளவுக் கப்பல்!!

இலங்கை நோக்கி வந்து கொண்டிருக்கும் சீனாவின், “யுவான் வாங் 5“ என்ற உளவுக் கப்பல், வரும் 22 வரை அந்நாட்டின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

அப்போது, ஆந்திராவின் சிறிஹரிகோட்டாவில் உள்ள “இஸ்ரோ“வின் ராக்கெட் ஏவுதளம், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கல்பாக்கம் அணு மின் நிலையம் மற்றும் நம் நாட்டு பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் அந்த உளவுக் கப்பல் சேகரித்துச் செல்லக் கூடிய அபாயம் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. கடுமையான எதிர்ப்பை தெரிவித்தும், சீன உளவுக் கப்பல் வருகையை இலங்கை தடுக்காதது, மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி உள்ளது.

அண்டை நாடான சீன இராணுவத்துக்கு சொந்தமான, “யுவான் வாங் 5” உளவுக் கப்பலை, ஆராய்ச்சி மற்றும் கண்காணிப்பு பணிகளுக்கான கப்பலாக 2007ல், அந்நாட்டு இராணுவம் பதிவு செய்துள்ளது. கண்டம்



விட்டு கண்டம் தாண்டி சென்று தாக்க கூடிய, “பாலிஸ்டிக்“ ஏவுகணைகளை ஏவவும், அதை கண்காணிக்கவும், அது தாக்க வேண்டிய இலக்கை மிக துல்லியமாக திட்டமிட்டு அழிக்கவும் இந்த கப்பல் பயன்படுத்தப்படுகிறது.

இந்த கப்பல், விண்வெளி மற்றும் செயற்கைக்கோள்களை உளவு பார்க்கும். மேலும், கடலின் ஆழம் மற்றும் அந்த பகுதியில் நீர்மூழ்கி கப்பல்களோ, நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல்களோ செல்ல முடியுமா என்பதையும் ஆய்வு செய்யும் திறன் உடையது. இதுபோன்ற உளவுக் கப்பல் இந்தியா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளிடமும் உள்ளன. சீனாவிடம் இதுபோன்ற ஏழு கப்பல்கள் உள்ளன.

தற்போது இலங்கைக்கு வரும் கப்பல், 728 அடி நீளமும், 85 அடி அகலமும் உடையது. சீனாவின், “லாங் மார்ச் 5பி” என்ற ராக்கெட்டை ஏவ,



இந்த கப்பல் சமீபத்தில் பயன்படுத்தப்பட்டது. இந்த கப்பலை இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஆக., 11 - 17 வரை நிறுத்தி வைக்க சீனா அனுமதி கோரியது.

இந்த கப்பல் இலங்கை வந்தால், அது இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்ற காரணத்தால், இந்திய மத்திய அரசு எதிர்ப்பு தெரிவித்தது. இதையடுத்து உளவுக் கப்பல் வருகையை நிறுத்தி வைக்கும்படி, சீன அரசிடம் இலங்கை அரசு தெரிவித்தது. இது சீனாவுக்கு ஏமாற்றத்தை அளித்தது.

அதன்பின், இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சருக்கு, சீன வெளியுறவுத்துறை அழுத்தம் கொடுத்ததை அடுத்து, கப்பல் வருகைக்கு இலங்கை அனுமதி அளித்தது. இந்நிலையில், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு நேற்று வந்துள்ள இந்த உளவுக் கப்பல், வரும் 22 வரை அங்கு நிறுத்தி வைக்கப்பட உள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம், இலங்கையின் தென் முனையில் அமைந்துள்ளது. ஐரோப்பாவையும், ஆசியாவையும் இணைக்கும் இடத்துக்கு அருகில் உள்ள இங்கு, கப்பல் போக்குவரத்து எப்போதும் அதிகளவில் இருக்கும். எனவே, யுவான் வாங் உளவுக் கப்பல், அப்பகுதியில் வரக்கூடிய மற்ற நாட்டு கப்பல்களையும் உளவு பார்க்க கூடிய வாய்ப்பு உள்ளது.

இந்த உளவு கப்பலில், “எலக்ட்ரானிக் வார்பேர்“ என்றழைக்கப்படும் நவீன போர் தொழில் நுட்பங்கள் உள்ளன. ஒரு நாட்டின் மீது போர் தொடுக்கும் போது, முதலில் அவர்களின் இணையம் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களை முடக்குவது வழக்கம். அதற்கு தேவையான அனைத்து நவீன கருவிகளும் இந்த உளவு கப்பலில் உள்ளது.

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஆறு படை தளங்கள் அம்பாந்தோட்டைக்கு அருகே அமைந்து உள்ளன. அங்கு என்னென்ன தொழில்நுட்பங்கள் உள்ளன, எவ்வளவு போர் விமானங்கள், போர் கப்பல்கள், ரேடார்கள் உள்ளன. அதன் திறன் என்ன என்ற தகவல்களை அவர்கள் சேகரித்து செல்வது எளிது.

மேலும், ஆந்திராவின் சிறிஹரி கோட்டாவில் உள்ள இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையமான இஸ்ரோவின் ராக்கெட் ஏவுதளம், செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள கல்பாக்கம் அனல் மின் நிலையம் உள்ளிட்டவை குறித்து ரகசிய தகவல்களை அந்த கப்பல் உளவு பார்த்து திரட்ட கூடிய வாய்ப்புள்ளது.

இலங்கையில் நின்றபடி இந்திய நாட்டின் பாதுகாப்பு ரகசியங்களை கண்காணித்து, தேவையான தகவல்களை சீன கப்பல் சேகரித்துச் செல்வது, இந்திய இராணுவத்துக்கு பெரிய சவாலை எதிர் காலத்தில் உருவாக்கும்.

எனவே, இந்த கப்பலின் வருகை இந்திய நாட்டு பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக அமையும் என, இராணுவ அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். கடுமையான எதிர்ப்பை தெரிவித்தும், சீன உளவுக் கப்பல் வருகையை, இலங்கை தடுக்காதது, மத்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

### “அச்சுறுத்தலை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை”

சென்னை துறைமுகத்தில் புதிய திட்டங்களை துவங்கி வைப்பதற்கான நிகழ்ச்சி நடந்தது. இதில், மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்பானந்த சோனவால், இணை அமைச்சர் சிறிபாத் யசோ நாயக் ஆகியோர் பங்கேற்றனர்.

பின், மத்திய அமைச்சர் சர்பானந்த சோனவால் அளித்த பேட்டி:

சாகர்மாலா திட்டம், இந்திய துறைமுகங்களை நவீனமயமாக்கவும், துறைமுகங்களை விரிவாக்கம் செய்யவும் அமல்படுத்தப்பட்டு உள்ளது. 7,500 கி.மீ., துாரம் உள்ள கடலோர மாவட்டங்களை மேம்படுத்த, 567 திட்டங்களை செயல்படுத்த உள்ளோம்.


உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப ரீதியாக, இந்திய துறைமுகங்களை வலிமையாக்க, பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சென்னை துறைமுகம் -- மதுரவாயல் இடையேயான ஈரடுக்கு மேம்பால திட்டத்திற்கு “டெண்டர்” விடப்பட்டு உள்ளது. சீன உளவுக் கப்பலை இலங்கையில் அனுமதித்துள்ளதால், இந்தியாவிற்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தலை தவிர்க்கும் நடவடிக்கைகளை, மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்திய பெருங்கடல், வங்காள விரிகுடா பகுதிகளில், இந்தியாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை, அரசு துவங்கி உள்ளது. சென்னையில் புதிய மீன்பிடி துறைமுகத்திற்கு, ஏற்கனவே 99 கோடி ரூபாயை, மத்திய அரசு ஒதுக்கி உள்ளது.

75வது ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு, இந்தியாவில் உள்ள 75 கடற்கரைகளை சுத்தப்படுத்தும் பணி, ஜூலை 3ல் துவங்கியது. செப்டம்பர் 1 வரை நடக்கிறது. அதில், சென்னையில் மெரினா, திருவான்மியூர், எலியட்ஸ் கடற்கரைகள் துாய்மைப்படுத்தப்பட உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.



(தினமலர்)



# ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள்?

யதீந்திரா

ரணில் விக்கிரமசிங்க அவரது, நீண்டநாள் இலக்கில் வெற்றி பெற்றிருக்கின்றார். ஆனாலும் இதனை முழுமையான வெற்றியென்று கூறவிட முடியாது. ஏனெனில் அவர் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு இந்த இடத்தை அடையவில்லை. ஆனாலும் கிடைத்த இடத்தை கெட்டியாக பற்றிக்கொள்வதும் அதே வேளை, எதிர்காலத்தில் முடிந்தால் மீண்டுமொருமுறை சதுரங்கத்தை ஆடுவதும்தான் அவருக்கு முன்னாலுள்ள தெரிவுகளாக இருக்கின்றன. எனவே அடிப்படையில் ரணில் ஆடப்போவது முற்றிலும் தென்னிலங்கைக்கான அரசியல் ஆட்டம்தான். எனவே இதில் தமிழர்கள் அதிகம் தலையை பிய்த்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் இந்தத் தென்னிலங்கை ஆட்டத்திற்குள் எந்தளவு தூரம் போகலாம், போகக் கூடாது என்பதில் தமிழ் தேசிய தரப்பினர் மத்தியில் தெளிவான புரிதல் இருக்க வேண்டியது அவசியம். 2015 ஆட்சி மாற்றத்திலிருந்து, தமிழ் தேசிய கூட்டமைப்பு அளவுக்கதிகமாக தென்னிலங்கை அரசியலுக்குள், தேவையற்ற வகையில் தலையீடு செய்துவருகின்றது. சுமந்திரன்தான் இதற்கான பிரதான காரணமாகும்.

சுமந்திரனின் வரவுக்கு முன்னர் இவ்வாறானதொரு போக்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் இருந்ததில்லை. இதற்கு சுமந்திரனின் பின்னணியும் ஒரு பிரதான காரணமாகும். சுமந்திரன் அடிப்படையிலேயே தமிழ் தேசிய அரசியல் பின்புலம் சார்ந்த ஒருவரல்ல. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்கு பின்னர் தமிழ் தேசிய அரசிலுக்குள் இணைந்து கொண்டவர்.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் நிலையில்தான், 2010இல் சுமந்திரனும் இருந்தார். ராஜபக்சக்களின் வீழ்ச்சி, ரணிலுக்கு வாய்ப்பை வழங்கியது போன்றுதான், புலிகளின் வீழ்ச்சி சுமந்திரனுக்கு மட்டுமல்ல விக்கினேஸ்வரனுக்கும் ஒரு வாய்ப்பை வழங்கியது. ஆனால், சம்பந்தனும் சுமந்திரனும் எதிர்பார்த்தது போன்று விக்கினேஸ்வரன் இருக்கவில்லை. யாழ்ப்பாணத்திற்கு வந்ததும், விக்கினேஸ்வரன் அவரது இயல்புக்கு மாறானதொரு கடும்போக்கு நிலைப்பாட்டை தழுவிக் கொண்டார். இப்போது அதனை தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றார்.

விக்கினேஸ்வரனோடு ஒப்பிட்டால் சுமந்திரன், வலிந்து தேசியவாதியாவதற்கான முயற்சிகளில் ஈடுபடவில்லை. சுமந்திரன் ஒரு வேளை அப்படி நடிக்க முற்பட்டிருந்தாலும் கூட, அது அதிக காலத்திற்கு நீடிக்காது. ஆனால் இந்த அரசியல் நடிப்பில் இப்போதும் கொடிகட்டிப் பறக்கும் ஒருவரென்றால், அது சிவஞானம் சிறிதரன் மட்டும்தான். அவரால் பிரபாகரனுக்கு பிறந்தநாளும் கொண்டாட முடிகின்றது,

உருத்திரகுமாரனோடு சேர்ந்து பொதுசன வாக்கெடுப்பு தொடர்பிலும் பேச முடிகின்றது. பின்னர் ரணில்விக்கிரமசிங்கவுடன், அரசியல் தீர்வு தொடர்பில் பேசப்போவதாகவும் கூற முடிகின்றது. இவ்வாறான நடிப்பாற்றல் எல்லோருக்கும் வாய்க்காது.


2015, தேர்தலில் சுரேஸ் பிரேமச்சந்திரன் தேர்தலில் தோல்வியடைந்ததை தொடர்ந்தே, சுமந்திரனின் செல்வாக்கு கூட்டமைப்பிற்குள் வலுவடைந்தது. தேசிய பட்டியல் மூலம் சுரேஸ்பிரேமச்சந்திரனுக்கு ஒரு இடத்தை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும் கூட, சம்பந்தன் அதனை விரும்பவில்லை. ஆட்சி மாற்றத்திற்கு பின்னர், கூட்டமைப்பின் அரசியல் அணுகுமுறை என்பது, முற்றிலும், கொழும்மை அனுசரித்து - முக்கியமாக ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து பயணிப்பாதாகவே இருந்தது.

இந்தக் காலத்தில்தான், சுமந்திரனின் கொழும்பு செல்வாக்கு கணிசமாக வலுவடைந்தது. ஒரு தமிழ் தேசிய கட்சியின் பிரதிநிதி என்பதற்கு அப்பால், ஒரு இலங்கை அரசியல்வாதியாக சுமந்திரன் வளர்சியடைந்தார். சுமந்திரன் அதிகம் தென்னிலங்கை அரசியலுக்குள் ஆர்வம் காண்பிப்பதை, இந்த பின்புலத்திலிருந்துதான் நாம் நோக்க வேண்டும்.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள் பற்றி பேசும்போது, இந்த விடயங்கள் எதற்காக என்னும் கேள்வி எழலாம். ரணில்-மைத்திரி ஆட்சிக் காலத்தில், ரணிலுக்கும் சுமந்திரனுக்கும் நெருக்கமான உறவிருந்தது. ரணிலுக்காக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கூட்டமைப்பு கடுமையாக விரோதித்துக் கொண்டது. ஆனால் இப்போது, ரணில் தொடர்பில் சுமந்திரன் வெளிப்படுத்திவரும் அபிப்பிராயங்களை உற்றுநோக்கினால், தென்னிலங்கையிலுள்ள சிங்கள அரசியல்வாதிகள் கூட, சுமந்திரனை போன்று ரணிலை விமர்சிக்கவில்லை.

இதன் பின்னணி என்ன? சுமந்திரன் தென்னிலங்கை அரசியலுக்குள் அதிகம் தலையீடு செய்ய முற்பட்டதன் விளைவாகவே, ரணிலுடன் முரண்பட வேண்டியேற்பட்டிருக்கின்றது. அது எவ்வாறான தலையீடு என்பதை நம்மால் அறிய முடியாவிட்டாலும் கூட, சுமந்திரன் மேற்கொண்ட சில நகர்வுகள், ரணிலின் தென்னிலங்கை நகர்வுகளுடன் நேரடியாக உரசியிருக்கின்றது. இல்லாவிட்டால் இந்தளவிற்கு ரணில் விக்கிரமசிங்கவை எதிர்க்க வேண்டிய தேவையில்லை.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகள் வெள்ளிடைமலை. அதாவது, தற்போது



கிடைத்திருக்கும் அதியுச்ச அதிகாரத்தை முழு அளவில் பிரயோகித்து, தன்னை நிலைநிறுத்திக் கொள்வது. அவ்வாறு தனது அதிகாரத்தை அதியுச்சளவில் பிரயோகிக்க வேண்டுமாயின், அரசு பலமாக இருக்க வேண்டும். அரசு பலமாக இருக்க வேண்டுமாயின் அரசிற்கு எதிரான எதிர்ப்புக்களை ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்த வேண்டும். இதனை கருத்தில்கொண்டே, போராட்டக்காரர்கள் ஒரு கட்டத்திற்கு மேல் வளர்சியடைவதை ரணில் தடுக்க முற்படுகின்றார். மேலும் இடதுசாரி பின்புலம் கொண்ட சக்திகள் கொழும்பில் எழுச்சியடைவதை இந்தியா மற்றும் மேற்குலம் ஒரு போதும் ஆதரிக்காது. தாராளவாத பின் புலம் கொண்டவர்கள் ரணில் விக்கிரம சிங்கவை ஒரு கட்டத்திற்கு மேல் எதிர்க்க மாட்டார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில்தான், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி, பொன்சேகா, போராட்டத்தை தன்வசப் படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுகின்றார். பொன் சேகாவின் தலைமைக்கு போராட்டம் கைமாறுமா யின், அது முற்றிலும் கட்சி அரசியலுக்குள் சென்றுவிடும்.

ஆனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ வேண்டிய உடனடித் தேவையை எதிர்கொண்டிருக்கும் மக்களோ, மூச்சு விடுவதற்கான அவகாசத்தை தேடியலைகின்றனர். இந்த நிலையில் இவ்வாறான போராட்டங்களை மக்கள் வெறுக்கவே அதிக வாய்ப்புண்டு. இந்த விடயத்தையும் ரணில் சரியாக கணித்திருப்பார்.

மேலும் ரணில் பிரச்சினைகளை தீர்க்கக் கூடியவர் என்னும் அப்பிராயம் மத்தியதர வர்கத்தினர் மத்தியிலுண்டு. இதுவும் ரணிலுக்கு சாதகமான ஒரு விடயமாகும்.

ரணிலின் தென்னிலங்கை நகர்வுகளுக்கு இரண்டு இலக்குகள் இருக்கலாம். ஒன்று, வீழ்ந்துகிடக்கும் ஐக்கிய தேசியக் கட்சியை தூக்கிநிறுத்த முயற்சிப்பது. இதுதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைத்திருக்கும் இறுதி சந்தர்ப்பம். அதே வேளை, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியாக தன்னை நிலைநிறுத்துவது. தற்போதுள்ள நிலையில், ராஜபக்சக்கள் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பில்லை.

இந்த நிலையில் அனைவரது ஆதரவுடனும் ரணில் விக்கிரமசிங்க ஒரு பொது வேட்பாளராக வருவதற்கான வாய்ப்பையும் குறைத்துமதிப்பிட முடியாது.


ஆனால் அனைத்தும் பொருளாதார நெருக்கடிகளை வெற்றிகொள்வதில்தான் தங்கியிருக்கின்றது. மொத்தத்தில், இது ரணிலுக்கான இறுதி அரசியல் சதுரங் கம். ரணிலை பொறுத்தவரையில் - அரசியல் சதுரங்க ஆட்டத்தை விடவும் மேலானது. அதுவே சற்று காலம் எடுக்குமென்றால், அரசியல் ஒரு மரதன் ஓட்டம் போன்றது. கடுமையான ஆட்டமெனில், அது ரகர் விளையாட்டு போன்றது. இரத்தம்பார்க்கும் விளையாட்டு எனில் பொக்சிங் போன்றது. அனைத்து ஆட்டத்தையும் ரணில் ஆட வேண்டியிருக்கின்றது. மற்றவர்கள் எவரையும் விடவும், அரசியலில் இந்த ஆட்டங்களை ரணில் நன்கு கற்றுத்தேறியவர். ரணிலின் தென்னிலங்கை ஆட்டத்திற்குள் தேவையில்லாமல் மூக்கை நுழைக்காமல் இருப்பதுதான், தமிழ் தேசிய தரப்பினருக்கு நல்லது.

ஆட்டத்தின் சூட்சுமங்களை விளங்கிக்கொள்ளாமல், ஆட்டத்திற்குள் நுழைவது எதிர்மறையான விளைவுகளையே தரும். யுத்தத்திற்கு பின்னரான கடந்த பன்னிரு வருடங்களில், தமிழ் தேசிய தரப்பினர், சிறிலங்காவின் அரசியல் சதுரங்கத்தில் வெறும் பார்வையாளர்களாகவே இருக்கின்றனர். சம்பந்தன் சுமந்திரன் போன்றவர்கள் தாங்கள் ஆடுவதாக எண்ணிக் கொண்டனர் ஆனால் அவர்கள் ஆடவேயில்லை.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ..................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ..................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , .............. , ............ ii) 18 , 15 , 12 , .............. , ............

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

....................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ....................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............. | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............. | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............. | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.......................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



.......................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2

---

**கல்வி tv CHANNEL-1**

**17.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**கல்வி tv CHANNEL - 2**

**17.08.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மீனவர்களின் எரிபொருள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது குறித்து ஹரீஸ் எம்.பி. பேச்சு!



அம்பாறை, ஓக. 17

அம்பாறை மாவட்ட மீனவர்கள் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் எதிர்கொள்ளும் எரிபொருள் தட்டுப்பாடு பிரச்சினை தொடர் பிலும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதித்துள்ள விடயம் தொடர்பிலுமான கலந்துரையாடல் ஒன்று கடந்த திங்கட்கிழமை கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரிஸின் பங்கெடுப்புடன் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

மீனவர்கள் எதிர்நோக்கும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ள விடயங்களை கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்த அம்பாறை மாவட்ட ஆழ்கடல் இயந்திர படகு மீனவர் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம். எச்.எம் நஸீர், பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரிசுக்கு எடுத்துரைத்தார்.

இதற்கமைவாக கல்முனை, சாய்ந்த மருது ஆகிய பிரதேசத்தில் உள்ள குறிப்பிட்ட 05 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விசேடமாக வாரத்தில் 07 நாட்களும் டீசலினை வரவழைத்து அதனை மீனவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமைப் படுத்தி வழங்குவதற்கு ஆலோசிக்கப்பட்டதுடன் இது சம்பந்தமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன் தீர்வு பெற்றுத் தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ் இதன்போது உறுதியளித்தார்.

இக் கலந்துரையாடலில் அம்பாறை மாவட்ட மீன்பிடித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிறிரஞ்சன், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ பாவா ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

திருமலை, ஓக. 17

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடமாக உள்ள, நான்கு வலயங்களுக்கான வலயக் கல்விப் பணிப்பாளர் பதவியை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் வலயங்களுக்கும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி 12 .9. 2022 ஆகும்.

மேலதிக விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம், கிழக்கு மாகாண சபையின் www ep. gov.lk என்ற இணைய தளத்தில் பிரவேசித்து தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ.டபிள்யூ ஜி. திஸநாயக்க தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக பெற்றோல் ஏற்றிச்சென்ற மூவர் கைது!

கிண்ணியா, ஓக. 17

சட்ட விரோதமாக பெற்றோல் ஏற்றிச்செல்ல முயன்ற மூன்று பேரை முச்சக்கரவண்டியுடன் நேற்று முன் தினம் மாலை கிண்ணியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் வைத்து இவர்கள் போக்கு வரத்து பொலிஸாரால் சோதனையிடப்பட்டபோது கைது செய்யப்பட்டனர்.

சட்டவிரோதமாக வியாபார நோக்கில் கிண்ணியா ஐ.ஓ.சி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து மட்டக்களப்புப் பகுதிக்கு பெற்றோலை எடுத்துச் செல்ல முயன்றபோதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, குறித்த நபர்களிடமிருந்து 65 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# முன்னாள் அமைச்சர் பஷீரை கிழக்கு ஆளுநராக்க வேண்டும்

## இலங்கை மக்கள் தேசிய கட்சி கோரிக்கை

அம்பாறை, ஓக. 17

கிழக்கு மாகாண ஆளுனராக முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத்தை நியமனம் செய்யவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இலங்கை மக்கள் தேசிய கட்சி கோரி உள்ளது.

இலங்கை மக்கள் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் என். விஷ்ணுகாந்தன் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண ஆளுந ராக கிழக்கு மண்ணையும், இங்கு உள்ள மக்களையும் நேசிக்கின்ற கனவான் ஒருவரே நியமிக்கப்பட வேண்டும். அதேபோல அவர் இங்கு வாழ்கின்ற அனைத்து இன மக்களாலும் நேசிக்கப்படுபவராக இருத்தலும் வேண்டும். எமது கட்சியை பொறுத்தவரை கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை அலங்கரிப்பதற்கு உண்மையிலேயே மிக பொருத்தமானவர் முன்னாள் அமைச்சர் பஷீர் சேகு தாவூத். இவர் எல்லா இன மக்களையும் அரவணைத்து நடப்பவர். எல்லா இன மக்களாலும் நேசிக்கப்படுபவர். குறிப்பாக தமிழ் - முஸ்லிம் உறவுக்கு பாலமாக விளங்குபவர். தமிழ் மக்கள் மூலமாக முதன்முதல் பாராளுமன்றம் சென்றவர். தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளுக்கு எப்போதும் குறுக்கே நிற்காதவர்.

இவர் கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்படுகின்ற பட்சத்தில் இந்த மாகாணத்தில் இன நல்லிணக்கம் செழிக்கும். குறிப்பாக தமிழ் - முஸ்லிம் உறவு மேம்படும். பாராளு மன்ற அரசியலில் மிக நீண்ட அனுபவம் உடைய இவரின் தெளிந்த சிந்தனை, தீர்க்கதரி சனம், தூர நோக்கு ஆகியவற் றின் மூலம் கிழக்கு மாகாணம் அனைத்து வகைகளிலும் முன் னேற்றம் பெறுவது திண்ணம். இவர் கிழக்கு மாகாண ஆளுன ராக நியமிக்கப்படுவதை எந்த மக்களும் ஆட்சேபிக்க போவதில்லை. எனவே ஆளுனராக இவரையே நியமிக்க வேண் டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோருகின்றோம்-என்றார். (அ)

# பிள்ளையானின் அலுவலகத்தில் இரண்டு கைக்குண்டுகள் மீட்பு!

மட்டக்களப்பு, ஓக. 17

பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) அலுவலகத்தின் கூரையில் இரண்டு கைக் குண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பகுதியிலுள்ள வீடொன்றில் இயங்கும் அலுவலகத்தின் உள் பக்க கூரையில் இருந்து இவை கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

இவை வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு கள் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இவ்வீட்டை கொள்வனவு செய்தவர் மேற் கூரையை சீர்செய்யச் சென்ற போது இந்த கைக்குண்டுகளை கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதையடுத்து பொலிஸ் குழுவொன்று அங்கு சென்று அவற்றினை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# மன்னார் மாவட்ட செயலகத்தில் சிறப்பாக நடந்த திருவள்ளுவர் விழா

மன்னார், ஓக. 17

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில் மன்னார் மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா நேற்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன்,சிறப்பு விருந்தினராக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா ஆகியோர் கலந்து கொண்டதோடு, பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆரம்ப நிகழ்வாக திருவள்ளுவர் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு,மாவட்ட செயலக பிரதான வீதியூடாக திருவள்ளுவர் சிலை ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம் பெற்றன.

திருக்குறள் நடனம்,சிறப்பு சொற்பொழிவு,குறள் வழி நாடகம்,திருவள்ளுவர் புகழ் பாடும் கோலாட்டம்,சிறப்புக் கவியரங்கம்,ஆகிய நிகழ்வுகள் இடம் பெற்றதோடு,பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது. (அ)









# உக்ரைன் அணு மின் நிலையத்தின் ஆய்வு பணிக்கு உதவ ஐ.நா. தயார்!

## ஆயினும் அதற்கு ரஷ்யா நிபந்தனை



நியூயோர்க், ஓக. 17

உக்ரைனின் ஐபோரிஜியா அணு மின் நிலையத்திற்கு சர்வதேச அணு சக்தி முகமை ஆய்வுக் குழுவினர் வருகையை உறுதி செய்வதற்கான வசதிகளை உறுதி செய்வதற்கான திறன் ஐக்கிய நாடுகள் சபையிடம் உள்ளது என ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

இதற்காக உக்ரைன் தலைநகர் கீவ் வழியாக ஆய்வுக் குழுவினர் செல்லும் திட்டத்தை ஐ.நா. முன் மொழிந்துள்ளது. ஆனால் உக்ரைன் தலைநகர் வழியாக எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுப்பது மிகவும் ஆபத்தானது என ரஷ்ய தூதர் நிபந்தனைகளை விதித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி 24 உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யா, மார்ச் மாதம் உக்ரைனில் உள்ள ஐரோப் பாவின் மிகப்பெரிய அணுமின் நிலையத்தைக் கைப்பற்றியது. இதன் பின்னர் இந்த அணு உலையை ஆய்வு செய்ய சர்வதேச அணுசக்தி முகமை தவறிவிட்டதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்குப் பதிலளித்த ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக், சர்வதேச அணுசக்தி முகமையுடன் இது குறித்துப் பேசியுள்ளதாகவும் ஐபோரிஜியா அணு மின் நிலையத்திற்கு சர்வதேச அணுசக்தி முகமை ஆய்வுக் குழுவினரின் பாதுகாப்பான வருகையை உறுதி செய்வதற்கான வசதிகள் மற்றும் பாதுகாப்பு திறன் ஐக்கிய நாடுகள் சபையிடம் உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

எனினும் அணுசக்தி ஆய்வு நிபுணர்களின் பாதுகாப்பான பயணத்தை ரஷ்யாவும் உக்ரைனும் உறுதி செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆனால் ஐ.நாவால் முன்மொழியப்பட்டவாறு உக்ரைன் தலைநகர் வழியாக ஐபோரிஜியா அணுமின் நிலையத்திற்கு செல்வது ஆபத்தானது என ரஷ்யா சிரேஷ்ட அதிகாரிகள் கூறியதாக ரஷ்ய செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கிடையே ஐபோரிஜியா அணுசக்தி வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவ நடவடிக் கைக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு ஐ.நா. பொதுச்செயலாளர் அன்ர னியோ குட்டரெஸ் அழைப்பு விடுத்தார்.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்குவுடன் ஜாபோரிஜி யாவின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து குட்டெரெஸ் கடந்த திங்க ளன்று பேசினார் என்று ஐக்கிய நாடுகள் சபையும் ரஷ்யாவும் தெரிவித்தன.

(அ)

# சூகிக்கு மேலும் 6 ஆண்டு சிறை!



## மியன்மார் இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு

நைபிடா, ஓக. 17

பதவி நீக்கம் செய்யப்பட்ட மியன்மார் ஆட்சித் தலைவர் ஆங் சான் சூகிக்கு ஊழல் குற்றச்சாட்டில் மேலும் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து இராணுவ ஆட்சியின் கீழ் உள்ள நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

தலைநகர் நைபிடாவில் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள 77 வயதான சூகிக்கு எதிரான சுமத்தப்பட்ட ஊழல், தேர்தல் விதிமீறல்கள் உள்ளிட்ட 18 வழக்குகளில் ஏற்கனவே 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது மேலும் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் தன் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் அபத்தமானவை என ஆங் சான் சூகி நிராகரித்துள்ளார்.

இந்நிலையில் சுகாதாரம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான ஆங் சான் சூகி நிறுவிய நிறுவனமான டாவ் கின் கீ அறக்கட்டளை மூலம் பணம் பெற்று ஒரு வீட்டைக் கட்டியமை, அரசாங்கத்துக்குச் சொந்தமான நிலத்தை தள்ளுபடி விலையில் குத்தகைக்கு எடுத்தமை, நிதியை தவறாகப் பயன்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் ஆங் சான் சூகிக்கு மேலும் 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து இராணுவ ஆட்சியின் கீழ் உள்ள நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை தீர்ப்பளித்துள்ளது.

மியன்மார் பொதுத் தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட சூகியின் தலைமையிலான அரசாங்கத்தை இராணுவம் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியது. இதனையடுத்து இராணுவத்துக்கு எதிராக பெரும் மக்கள் போராட்டம் வெடித்தது. இந்தப் போராட்டங்களை ஆயுத முனையில் இராணுவம் அடக்கியது. இதனால் நாட்டில் தொடர்ந்து கொந்தழிப்பான சூழல் நிலவி வருகிறது.

இராணுவ ஆட்சியாளர்களை எதிர்த்த பல்லாயிரக் கணக்கான மக்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். பலர் சித்திரவதைகளுக்கு உள்ளாகினர். பெருமளவானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சியாளர்களால் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை விமர்சித்துள்ளது.

அத்துடன், இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மர் மீது சர்வதேச சமூகம் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. மேலும் சூகிக்கு எதிராக குற்றச்சாட்டுகள் கேலிக்கூத்து எனக் கூறி சர்வதேச நாடுகள் பல நிராகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆப்கானில் கனமழை!

## வெள்ளபெருக்கில் சிக்கி 40 பேர் பலி! இதுவரை 100 பேரை காணவில்லை!!

காபூல், ஓக. 17

ஆப்கானிஸ்தானில் பெய்து வரும் கனமழை, வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களில் சிக்கி 40 பேர் பலியாகியுள்ளனர். 20 பேர் காயமடைந்துள்ளதுடன், 100 பேர் வரை காணாமல் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் உள்ள பர்வான் மாகாணத்தில் நேற்று முன்தினம் திங்கிழமை மாலை முதல் கடும் மழை பெற்று வருகிறது. கனமழையின் காரணமாக நூற்றுக்கணக்கான கிராமங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததில் ஏராளமான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. சாலைகளில் வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்து ஓடுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தில் சிக்கி நேற்று முன்தினம் திங்கட்கிழமை மட்டும் 31 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணிகளின்போது மேலும் சிலரின் சடலங்கள் மீட்கப்பட்ட நிலையில் 40 பேர் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 100 பேர் வரை காணாமல் போயுள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (அ)



# குரங்கு அம்மை தொற்றுக்கு ‘கிளேட் வைரஸ்’ என பெயர்!

பரிஸ், ஓக. 17

உலக சுகாதார நிறுவனம் குரங்கு அம்மை நோயுடன் தொடர்புடைய வைரஸின் பெயரை ”கிளேட்” என்று மாற்றியிருக்கிறது. அதன்படி மத்திய ஆபிரிக்காவின் கொங்கோ வட்டகையில் காணப்படுகின்ற மூல வைரஸ் கிரிமி கிளாட் - 1 எனவும் மேற்கு ஆபிரிக்காவில் அறியப்பட்ட வைரஸ் கிளாட் - 2 எனவும் அழைக்கப்படும். கிளாட் - 2 என்பது 2ஏ, 2பி என்ற அதன் இரண்டு திரிபுகளையும் உள்ளடக்கும்.

வைரஸ் கிரிமிகளுக்குப் பெயரிடுவதற்காக உலக சுகாதார நிறுவனத்தினால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் குழு இந்தப் பெயர்த் தெரிவை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுள்ளது.

டென்மார்க்கில் குரங்குகளில் அறியப்பட்ட காரணத்தினாலேயே அந்த வைரஸ் நோய்க்கு குரங்கு வைரஸ் என்ற பெயர் ஆரம்பத்தில் வழங்கப்படலாயிற்று. ஆயினும் அது குரங்குகளில் மட்டும் காணப்படும் ஒரு வைரஸ் இனம் அல்ல. மங்கி பொக்ஸ் அல்லது குரங்கு அம்மை என்ற அதன் பெயர் நீண்ட காலமாக இழிவான அல்லது இனவாத அர்த்தங்களைக் கொண்டதாக இருந்து வருகிறது என்று சமூக நிபுணர்களும் ஆர்வலர்களும் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். குரங்குகளுக்கும் ஆபிரிக்கக் கறுப்பினத்தவர்களுக்கும் மட்டுமான தொற்று நோயாகவும் அதனைச் சிலர் வகை பிரிக்க முற்பட்டனர்.

உலகெங்கும் தொற்று நோய்கள் ஏற்படுத்துகின்ற இது போன்ற சமூக, கலாசார, இனம் மற்றும் புவியியல் வேறுபாடுகளைக் களையும் நோக்குடன் வைரஸ் கிரிமிகளுக்குப் பொதுவான பெயர்களைச் சூட்டுவதற்கு உலக சுகாதார நிறுவனம் முடிவு செய்தது.

புதிதாக அடையாளம் காணப்பட்ட வைரஸ்கள்,அவற்றோடு தொடர்புடைய நோய்கள் மற்றும் வைரஸ் திரிபுகள் எந்தவொரு கலாச்சார, சமூக, தேசிய, பிராந்திய, தொழில் முறை அடிப்படையில் விரோதங்களைப் - பாகுபாடுகளை - ஏற்படுத்தாமல் தடுக்கவும் எந்த ஓர் இனக்குழுக்களுக்கும் தீங்கு விளைவிப்பதைத் தவிர்ப்பதற்காகவும், வர்த்தகம், பயணம், சுற்றுலா அல்லது விலங்குகள் நலனில் எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்கவும் அவற்றுக்குப் புதிய பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்று உலக சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.



அண்மையில் உலகை ஆட்டிப் படைத்த கொரோனா வைரஸ் மற்றும் தொடராகப் பரவிய அதன் திரிபுகளுக்குக் கிரேக்க இலக்கங்களது பெயர்களை சுகாதார நிறுவனம் சூட்டியிருந்தது.

இதேவேளை, உலகின் பல பகுதிகளில் தற்போது காணப்படும் குரங்கு வைரஸ் குரங்குகளால் பரப்பப்படவில்லை என்பதைச் சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு பாலினச் சேர்க்கையில் உள்ள ஆண்கள் மத்தியிலேயே அது தீவிரமாகத் தொற்றி வருகிறது.

இந்த வைரஸைக் குரங்குகள் பரப்புவதாகக் கூறி அவற்றைத் தாக்கியும் கொன்றும் கொடுமைப்படுத்துகின்ற சில சம்பவங்கள் பிறேசில் உட்படச் சில நாடுகளில் இடம்பெற்றுள்ளன. (அ)

# நான்காவது ரி-20 போட்டி; ஆப்கான் அபார வெற்றி!

பெல்பாஸ்ட், ஓக. 17

நான்காவது இருபது - 20 போட்டியில் 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அயர்லாந்தை வீழ்த்தி ஆப்கானிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

அயர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடுகிறது.

இந்தத் தொடரில் முதல், 2ஆவது இருபது - 20 போட்டியில் அயர்லாந்தும், 3ஆவது போட்டியில் ஆப்கானிஸ்தானும் வெற்றி பெற்றன. இந்நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது இருபது 20 பெல்பாஸ்டில் நடைபெற்றது.



நாணயச் சுழற்சியில் வென்ற அயர்லாந்து முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. மழை காரணமாக ஆட்டம் 11 ஓவராக குறைக்கப்பட்டது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் நிர்ணயிக்கப்பட்ட 11 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் குவித்தது. அந்த நஜிபுல்லா அரைச்சதமடித்தார். கடைசி கட்டமாக அதிரடி காட்டிய ரஷித் கான் 10 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பௌண்ட்ரி உள்பட 31 ஓட்டங்கள் குவித்தார்.

இதையடுத்து, 133 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது. இறுதியில்,அயர்லாந்து 11 ஓவர்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றது.

அதிகபட்சமாக டாக்ரெல் 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன்மூலம் ஆப்கானிஸ்தான் அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# இந்திய உதைபந்தாட்ட சபைக்கு இடைக்கால தடை விதித்தது பிபா!

நியூயோர்க், ஓக. 17

அகில இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பின் அங்கீகாரம் தற்காலிகமாக இரத்து செய்யப்படுவதாக சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (பிபா) தெரிவித்துள்ளது.

அகில இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பில் மூன்றாம் தரப்பினர் தலையீடு என்பது பிபா சட்டங்களை மீறுகிறது என்பதால் இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பு உடனடியாக இடைநீக்கம் செய்ய ஏகமனதாக முடிவு செய்துள்ளதுதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இடைநீக்கத்தால் நடப்பு ஆண்டில் ஒக்ரோபார் 11 முதல் - 30 ஆம் திகதி வரை இந்தியாவில் நடைபெறவிருந்த பிபா 17 பிரிவினருக்கான மகளிர் உலகக் கிண்ணம் 2022 திட்டமிட்டபடி தற்போது இந்தியாவில் நடத்த முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இதேவேளை, இந்திய உதைபந்தாட்ட கூட்டமைப்பு நிர்வாகக் குழுவுக்கு உரிய முறையில் உறுப்பினர்கள், நிர்வாகிகள் நியமிக்கப்பட்டால் உடனடியாக இந்த இடைநீக்க உத்தரவு திரும்பப்பெறப்படும் என்று பிபா தெரிவித்துள்ளது.

மேலும், இந்திய இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுடன் இதுதொடர்பாக ஆலோசித்து வருகிறோம். விரைவில் தீர்வு எட்டப்படும் என்றும் பிபா கூறியுள்ளது. (ஐ)

# ஓய்வை அறிவித்தார் கெவின் ஓ பிரைன்!

டப்ளின், ஓக. 17

சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து விலகுவதாக பிரபல அயர்லாந்து வீரர் கெவின் ஓ பிரைன் அறிவித்துள்ளார்.

38 வயது கெவின் ஓ பிரைன் அயர்லாந்து அணிக்காக 2018 முதல் 2019 வரை 3 டெஸ்ட்கள், 153 ஒருநாள், 110 இருபது - 20 போட்டிகளில் விளையாடியுள்ளார். கடைசியாக 2021 இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடினார்.

இந்நிலையில், சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக கெவின் ஓ பிரைன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்த அறிக்கையில் அவர் கூறியவை வருமாறு,

என் நாட்டுக்காக 16 வருடங்களாக 389 போட்டிகளில் விளையாடிய பிறகு என்னுடைய ஓய்வு அறிவிப்பை வெளியிடுகிறேன். அவுஸ்திரேலியாவில் நடைபெறும் இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியுடன் ஓய்வு பெற எண்ணியிருந்தேன். ஆனால், கடந்த உலகக் கிண்ணத்துக்குப் பிறகு அயர்லாந்து அணிக்கு நான் தெரிவாகவில்லை. தெரிவுக் குழுவினரும் நிர்வாகமும் வேறு திசையில் செல்கிறார்கள் என எண்ணுகிறேன். அடுத்ததாக இளம் வீரர்களுக்குப் பயிற்சியளிப்பதில் ஆர்வமாக உள்ளேன் - என்றுள்ளது.




கெவின் ஓ பிரைன் என்றாலே 2011 உலகக் கிண்ணத்தில் இங்கிலாந்துக்கு எதிராக அவர் விளையாடியதுதான் அனைவருக்கும் ஞாபகம் வரும். அயர்லாந்து அணி 106ஃ4 எனத் தடுமாறிக் கொண்டிருந்தபோது களமிறங்கினார் கெவின் ஓ பிரைன். அதன் பிறகு நிலைமை 111/5 என மேலும் மோசமானது. 327 ஓட்டங்கள் இலக்கு. ஆனால், அதிரடியாக விளையாடி சூழலை மாற்றினார் கெவின் ஓ பிரைன். 6 சிக்ஸர்களுடன் 50 பந்துகளில் சதமடித்தார். உலகக் கிண்ண வரலாற்றில் விரைவாக அடிக்கப்பட்ட சதம் அது.

அண்டர்சன், பிரோட், ஸ்வான் அடங்கிய இங்கிலாந்துப் பந்துவீச்சைத் திறமையாக எதிர்கொண்டு 3 விக்கெட் வித்தியாசத்தில் மறக்க முடியாத வெற்றியைப் பெற்றது அயர்லாந்து. 63 பந்துகளில் 113 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார் கெவின் ஓ பிரைன். உலகக் கிண்ண வரலாற்றில் அதிக ஓட்டங்களை விரட்டி வென்ற பெருமையையும் அடைந்தது அயர்லாந்து. (ஐ)




# ரோஹித் சாதனையை தகர்த்தார் குப்தில்!

கிங்ஸ்ரன், ஓக. 17

சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களை சேர்த்த வீரர் என்ற புதிய சாதனையை நியூசிலாந்தின் மார்ட்டின் குப்தில் படைத்துள்ளார்.

முன்னதாக, இந்த வடிவ போட்டியில் இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா 3,487 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருந்த நிலையில், தற்போது அவரை பின்னுக்குத் தள்ளி 3,497 ஓட்டங்களுடன் முதலிடத்தைப் பிடித்திருக்கிறார் குப்தில். இவர், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3-ஆவது இருபது -20 ஆட்டத்தின்போது இந்த சாதனையை எட்டினார்.

இருபது - 20 போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த முதல் 10 வீரர்களின் விவரம் வருமாறு,

மார்ட்டின் குப்தில் (நியூசிலாந்து) 3,497, ரோஹித் சர்மா (இந்தியா) 3,487, விராட் கோலி (இந்தியா) 3,308, போல் ஸ்டிர்லிங் (அயர்லாந்து) 2,975, அரோன் பின்ஞ் (அவுஸ்திரேலியா) 2,855, பாபர் அஸாம் (பாகிஸ்தான்) 2,686, டேவிட் வோர்ணர் (அவுஸ்திரேலியா) 2,684, முகமது ஹபீஸ் (பாகிஸ்தான்) 2,514, இயன் மோர்கன் (இங்கிலாந்து) 2,458, சொஹைப் மாலிக் (பாகிஸ்தான்) 2,435.

# சிம்பாவேயுடனான தொடர் வாஷிங்டன் சுந்தர் விலகல்!

புதுடில்லி, ஓக. 17

சிம்பாவே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரிலிருந்து இந்திய அணியின் வாஷிங்டன் சுந்தர் விலகியுள்ளார்.

சிம்பாவே சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் ஆடுகிறது. முதலாவது ஒரு நாள் போட்டி நாளை ஹராரேயில் நடக்கிறது.

இந்திய அணிக்கு கே. எல். ராகுல் தலைவராகவும், ஷிகர் தவான் உப தலைவராகவும் செயல்படவுள்ளனர். இந்தத் தொடரில், அணியில் இடம்பெற்றிருந்த சகலதுறை வீரர் வாஷிங்டன் சுந்தர் தோளில் ஏற்பட்ட காயத்தால் விலகியுள்ளார்.

இந்நிலையில் வாஷிங்டன் சுந்தருக்கு பதிலாக ஷாபாஸ் அகமது அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஷாபாஸ் 18 முதல் தர போட்டிகளில் விளையாடி 7 அரைச் சதங்கள் மற்றும் ஒரு சதத்துடன் 1,041 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 57 விக்கெட்களையும் எடுத்துள்ளார்.



# மீள திறக்கப்படும் தாமரை கோபுரம்!

*கொழும்பு, ஓக. 17*

*சீன கடனுதவியில் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்ட தாமரை கோபுரத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் திறந்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*வர்த்தக நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் முதலீட்டு வாய்ப்புகளுக்காக இந்த 300 மீற்றர் உயர கோபுரத்தை திறக்க கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தீர்மானித்துள்ளது.*

*இதன்படி, தாமரைக் கோபுரத்தில் அலுவலக வசதிகள், காட்சியறைகள், மாநாட்டு அரங்குகள் மற்றும் பிரத்தியேகமான வர்த்தக நிலையங் களை பெற முதலீட்டாளர்க ளுக்கு வாய்ப்பு வழங்கப்பட் டுள்ளது.*

*அவ்வாறே அதில், சர்வதேச அளவிலான நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும். (அ)*

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**22 - 04 - 1933**



**மறைவு**
**14 - 08 - 2022**

### நகுலேசபிள்ளை துஷ்யந்தன்

யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும், கரம்பொன், கொழும்பு - 12, அவுஸ்திரேலியா Sydney ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட நகுலேசபிள்ளை துஷ்யந்தன் அவர்கள் 14.08.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி, ஆச்சிமுத்து தம்பதிகளின் மூத்த பேரனும், காலஞ்சென்ற நகுலேசபிள்ளை, சுந்தரம் தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற இராசையா, நாகம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற திலகவதி அவர்களின் அன்புக் கணவரும், எழிலி, மைதிலி, மாலினி, மனோகரி, திவாகரன், சுமதி, சாம்பவி, காண்டீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சசீந்திரன் மகாலிங்கம், அகஸ்தியா நரேந்திரநாதன், சுரேஷ் வாமதேவன், சிவானந்தி திவாகரன், நந்தகுமார் பாலகிருஷ்ணன், ரேகா காண்டீபன் ஆகியோரின் மாமனாரும், ஆரணி, ஆருதி, ஜீவகன், உமையாள், ஆரபி, வராகி, டேவேஷ் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், காலஞ்சென்ற உமாபதிசிவம், ஸ்ரீதேவி கணபதிப்பிள்ளை (கனடா), காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி, நற்றமிழ்மாது ராஜகோபால் (கனடா), ஸ்ரீதரன் (கனடா), சுயம்புலிங்கம் (கனடா) ஆகியோரின் பெரியண்ணாவும், காலஞ்சென்ற சண்முகலிங்கம், இராசையா ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாரதிதாசன், பத்மபூசணி, இளங்கோ, தனஞ்செயன், ஐங்கரன், கார்த்திகா, முகிலன், றஞ்சன், தனேசன் ஆகியோரின் பெரியப்பாவும், ரகுமாரன், சுகுமாரன், திருக்குமாரன், சுசித்திரா, நந்தகுமாரன், விஜித்திரா, துஷ்யந்தி, தர்மசீலன், தமிழ்ச்செல்வி, காலஞ்சென்ற சுதாகரன், கலைச்செல்வி, வாகினி, சசிமீரா ஆகியோரின் மாமாவும் ஆவார்.

பார்வைக்கு :
Wednesday, 17 Aug 2022 12:15 PM – 3:15 PM
Rookwood Memorial Gardens and Crematorium East Chapel Memorial Ave, Rookwood NSW 2141, Australia.

கிரியை :
Wednesday, 17 Aug 2022 12:15 PM – 3:15 PM
Rookwood Memorial Gardens and Crematorium East Chapel Memorial Ave, Rookwood NSW 2141, Australia.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல் :
**சசீந்திரன் (மருமகன்)**

தொடர்புகளுக்கு :
**சசீந்திரன் (மருமகன்)** – 0061435111090
**சுரேஷ் (மருமகன்)** – 00447956316956
**மாலினி (மகள்)** – 0016023216333
**சிறீதரன் (தம்பி)** – 0016478877563
**திவாகரன் (மகன்)** – 0061426359335
**காண்டீபன் (மகன்)** – 0016475756692

# வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்து இலங்கை அரசு தடையை நீக்கவில்லை

## *அமைச்சர் பந்துல குணவர்தன விளக்கம்*

**கொழும்பு, ஓக. 17**

**வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்த்து, இலங்கை அரசு சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை நீக்கவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.**

*அவர் மேலும் கூறுகையில்,*

*முதலீடுகளைப் பெறவே சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது எனக் கூறுவது சிலரின் தனிப்பட்ட கருத்தாக இருக்கலாம்.*

*1968 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சட்ட விதிகளுக்கமைய, பாதுகாப்பு அமைச்சால் பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதம் அல்லாத அமைப்புக்கள் மீதான தடை அல்லது தடைநீக்கம் மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கமைய, 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டது.*

*அண்மைய காலங்களில் குறித்த அமைப்புக்களின் நடவடிக்கை தொடர்பாகத் தொடர்ச்சியான தீவிர கண்காணிப்பின் பின்னரே இந்தத் தடை நீக்கப்பட்டது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.*

*சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள கொள்கைகளுக்கு அமையவே இந்தத் தடை நீக்கப்பட்டது-என்றார். (அ)*

# பிஸ்கட் விலை அதிகரிப்பு!

*கொழும்பு, ஓக. 17*

*தமது உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் விசேட கோதுமை மாவின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக பிஸ்கட்டுக்களின் விலைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக இலங்கை இனிப்பு பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.*

*பல சந்தர்ப்பங்களில் தங்களது உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன. தங்களது உற்பத்தி பொருட்களுக்காக பயன்படுத்தப்படும் கோதுமை மாவின் விலைகள் அதிகரித்துள்ளன.*

*இதன் காரணமாகவே தங்களது உற்பத்தி பொருட்களுக்கான விலைகளும் அதிகரித்துள்ளதாக இலங்கை இனிப்பு பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)*

# 2 வருடங்களில் 25 சிறுத்தைகள் பலி!

*கொழும்பு, ஓக. 17*

*கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 25 சிறுத்தைகள், பொறிகள் - வலைகளில் சிக்கி உயிரிழந்ததாகவும், விலங்குகளை மீட்பதில் தாமதம் ஏற்பட்டதே அந்த உயிரிழப்புக்குக் காரணம் எனவும் கூறப்படுகின்றது.*

*என வனவிலங்கு பாதுகாப்புத் துறையின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

*குறிப்பாக,வலைகள் மூலம் பிடிக்கப்பட்ட பெரும்பாலான சிறுத்தைகள் சுமார் 15 மணி நேரத்திற்குப் பிறகு விடுவிக்கப்பட்டதாக அவர் கூறினார். (அ)*

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**27 - 10 - 1921**



**மறைவு**
**12 - 08 - 2022**

### சுப்பிரமணியம் பொன்னுச்சாமி

(ஓய்வுபெற்ற தபால் இலாகா அதிகாரி,
பழைய மாணவர் காட்லி கல்லூரி)

யாழ். பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், அவுஸ்திரேலியா Melbourne ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னுச்சாமி அவர்கள் 12.08.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாத்தையா செல்லத்துரை, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பவளம்மா அவர்களின் அன்புக் கணவரும், யசோதா அவர்களின் அன்புத் தந்தையும், விமலேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, விஜயலஷ்சுமி, மாணிக்கம் மற்றும் ஆறுமுகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான ஞானஅமிர்தம், நாகலிங்கம், சிவலிங்கம், சிவக்கொழுந்து, விஜயலட்சுமி மற்றும் சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், நாகேந்திரன், வசந்தினி, காலஞ்சென்ற தெய்வேந்திரன், ராசேந்திரன், நளாயினி, தவராஜன், ஜெகராஜன், இராஜலட்சுமி, சாந்தலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற குணபாலசிங்கம், குணேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணவதி, சாந்தகுமாரி, மனோகரன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சிவகுமாரி, செல்வகுமாரி, நந்தகோபன், ராதை, நந்தகுமாரன், நந்ததயாளன், கமலவதனி, ஈசன், கல்யாணி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், துவாரகா, கரி, சாயி ஆகியோரின் பாசமிகு பேரனும், எவலி, மாயன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

கிரியை :
Thursday, 18 Aug 2022 12:30 PM
Boyd Chapel Second Ave, Springvale VIC 3171, Australia.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**யசோதா (மகள்)**

தொடர்புகளுக்கு :
**யசோதா (மகள்)** – 0061423300878
**விமலேஸ்வரன் (மருமகன்)** – 0061412036693
**ஆறுமுகம் (சகோதரன்)** – 0014164398162
**நந்தன் (பெறாமகன்)** – 00447915048048
**நளாயினி (மருமகள்)** – 00447837041975
**ராதை (பெறாமகள்)** – 0094762208798
**நந்தகுமாரன் (பெறாமகன்)** – 00447714237365
**நந்ததயாளன் (பெறாமகன்)** – 00447717686760

## தடை நீக்கம்...

ஜெனிவா மாநாட்டைச் சமாளிக்கவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடை நீக்கம் என்ற இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அவரின் இந்த ஏமாற்று நாடகத்துக்கு சர்வதேசமும் பலியாகப் போகின்றது.”

- இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப் பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனிநபர்களும் சேர்க் கப்பட்டனர். இந்தநிலையில் யார் மூலம் காய்களை நகர்த்தி சர்வதே சத்தை ஏமாற்ற முடியுமோ அந்த அமைப்புக்களையும் குறிப்பிட்ட நபர்கள் மீதான தடையையும் ஜனாதிபதி நீக்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர், ஜனாதிபதி என்ற ரீதியிலும் இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கும், மக்களுக்கும் விளக்கமளிக்க வேண்டும்-என்றார். (அ)

## கொரோனாவுக்கு...

யில் சிகிச்சை பெற்று வந்த 76 வயது பெண்ணே நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

கோவிட்-19 நோய்த்தொற்றாலேயே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டநாட்களுக்கு பின் யாழ்ப்பாணத்தில் கோவிட்-19 நோய்த்தொற்றின் பரவல் அதிகரித்ததுடன், மரணமும் பதிவாகியுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-3)

## முச்சக்கர...

யோர் முன்னிலையில் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது.

இந்தக் கூட்டாண்மையின் கீழ், இலங்கையின் மிகப்பெரிய வாகன நிறுவனமான டி. பி. எம். சி., முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றி விற்பனைக்குப் பிந்தைய சேவைகளையும் நாடளாவிய ரீதியில் உள்ள தமது சேவை மையங்கள் மூலம் வழங்கவுள்ளது.

இலங்கையில் முச்சக்கர வண்டித் தொழில்துறை 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு நிலையான வேலை வாய்ப்பை வழங்குகிறது.

ஒப்பந்தத்தின் பங்குதாரரான யு.எஸ். எய்ட் 1961ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பொருளாதார மேம்பாடு, தொழில் முனைவு, பெண்கள் வலுவூட்டல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டங்களுக்கு 200 கோடி டொலர்களுக்கும் அதிகமாக இலங்கை ரூபாயில் 700 பில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலம்பெயர்ந்தவர்...

கொழும்பு சினமன் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற தொழில்சார் வல்லுநர் சங்கங்களின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தற்போது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்புகளும் தேவை.

சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்ட உடன்படிக்கை தொடர்பில் நாடு மிகவும் நெருக்கடியான நிலையில் இருக்கிறது.

செழிப்புக்கும் பேரழிவிற்கும் இடையே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்த முடியும். அது முடிந்தவுடன் சர்வதேச நாணய நிதியத்துடனான பணியாளர் நிலை ஒப்பந்தம் நடைமுறைக்கு வரும். அது இலங்கைக்கு நம்பிக்கையை அளிக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும், தற்போது நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஸ்திரமான நிலையில் உள்ளது. இந்நிலையில், கடந்த ஜூன் 18ஆம் திகதி நடைமுறைக்கு வந்த அவசரகால சட்ட விதிகள் வரும் வியாழக்கிழமையுடன் நிறைவடைகின்றன. இந்தச் சட்டங்கள் இனி நீடிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

## மருந்து...

பில் அந்த சங்கத்தின் செயலாளர் ஹரித அளுத்கே கூறுகையில்,

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக பல மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அரசாங்கத்தால் இவ்வருடத்தில் மூன்று மாதங்களுக்கு தேவையான மருந்துகளை கொள்வனவு செய்வதற்காக 12.4 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எனினும், கடந்த 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஒரு காலாண்டுக்கு மாத்திரம் 20 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், உயிர்காக்கும் மருந்துகள் குறைந்த அளவிலும் ஏனைய மருந்துகள் போதியளவிலும் கையிருப்பில் உள்ளன.

கடந்த மே மாதம் 13 ஆம் திகதியிலிருந்து 200இற்கும் அதிகமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. மேலும், 56 சதவீதமான சத்திரசிகிச்சை மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அது மாத்திரமின்றி சத்திர சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான இயந்திர வசதிகளைப் பெற்றுக் கொள்வதிலும் சிக்கல் நிலவுகிறது - என்றும் தெரிவித்தார். (ஐ)

## மீனவரின்...

மேலும், கடல் உணவுகளை பெற முடியாதளவு பிரச்னை இருப்பது உண்மைதான். நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதால் எமது மக்கள் அதிகளவான பிரச்னைகளை எதிர்கொள்கின்றார்கள். இதற்கு தீர்வு காணும் வகையில் எரிபொருள் தாராளமாக கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடற்றொழிலாளர்களை பொறுத்தவரையில், சிறு கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடாக இருக்கின்றது. கொழும்புடன் தொடர்பு கொண்டு தனியார் மண்ணெண்ணெயை இறக்குமதி செய்வது குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

இதேவேளை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனமும் மசகு எண்ணையை வடித்து மண்ணெண்ணெயாக விநியோகிப்பதற்கான நடவடிக்கையும் முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வார இறுதியில் இது கைகூடும் என்று நம்புகின்றேன் - என்றும் கூறினார். (ஐ)

## பிரிட்டனின்...

அறிமுகப்படுத்தும் வளரும் நாடுகளுக்கான வர்த்தகத் திட்டம் (Developing Countries Trading Scheme - DCTS) 2023ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது. இந்தத் திட்டம் தற்போது பிரித்தானியாவின் ஜி. எஸ். பி. சலுகை பயன்பெறும் நாடுகளுக்குப் பொருந்தும்.

எனினும், இந்தத் திட்டம் உலக வங்கியால் தொடர்ந்து 3 ஆண்டுகளுக்கு மேல், நடுத்தர வருமானம் என்று வகைப்படுத்தப்பட்ட நாடுகளுக்கு அல்லது குறைந்த வருமானம் மற்றும் குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட பிரித்தானியாவுடன் சுதந்திர வர்த்தகம் கொண்ட நாடுகளுக்கு பொருந்தாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கொரோனாவால்...

60 வயதுக்கு மேற்பட்ட 3 ஆண்களும், 3 பெண்களுமே தொற்றால் உயிரிழந்தனர்.

இதன்படி, இதுவரையில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 630ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# யுவான் வாங் - 5 போன்ற கப்பல் 2014இலும் இலங்கைக்கு வந்தது!

## சீனத் தூதுவர் சொல்கிறார்

அம்பாந்தோட்டை, ஓக. 17

யுவான் வாங் 5 கப்பல் போன்றதொரு கப்பல் ஏற்கனவே 2014இல் இலங்கைக்கு வந்துள்ளது என்று தெரிவித்துள்ள சீன தூதுவர், இந்தியாவின் பாதுகாப்பு கரிசனைகள் குறித்த கேள்விகளுக்கான பதில்களை இந்தியாவிடம்தான் கேட்க வேண்டும் - என்று கூறியுள்ளார்.

யுவான் வாங் - 5 கப்பலின் வருகை நிகழ்வின்போது செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அந்த விவரம் வருமாறு,

கேள்வி - கப்பல் தாமதமானதற்கு பல காரணங்கள் சொல்லப்படுகின்றன?

பதில்- எல்லோருக்கும் தெரியும் நான் பணிவுடன் இருக்கவேண்டிய அவசியமில்லை.

கேள்வி- இந்தியா பாதுகாப்பு கரிசனைகளை வெளியிட்டுள்ளதே?

பதில்- நீங்கள் இந்த கேள்விகளை இந்திய நண்பர்களிடம் கேட்கவேண்டும் என நான் கருதுகின்றேன். இந்த விஞ்ஞான ஆராய்ச்சி கப்பல் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வெற்றிகரமாகவும் அமைதியாகவும் வந்தடைந்துள்ளது. இது எங்கள் இரு நாடுகளிற்கு இடையில் வழமையான பரிமாற்றங்கள் என நான் கருதுகின்றேன்.

சீனாவும் இலங்கையும் நீண்ட கால நட்புறவை கொண்டுள்ளன. சீன ஆராய்ச்சி கப்பலின் அம்பாந்தோட்டை வருகை மிகவும் இயல்பானது சாதாரணமானது. இதில் விசேடமாக எதுவுமில்லை எல்லோருக்கும் இது தெரியும்.

இவ்வாறான கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இது முதல் தடவையல்ல. 2014 இல் இவ்வாறானதொரு சீன கப்பல் கொழும்பிற்கு விஜயம் மேற்கொண்டது. ஆகவே இது இயல்பான விடயம், எங்கள் ஊடக நண்பர்கள் இந்த நோக்கத்தின் விஜயம் குறித்து இலங்கை மக்களுக்கும் முழு உலகுக்கும் தெரிவிக்கவேண்டும்.

கேள்வி - இந்த கப்பலின் விஜயம் குறித்து கடந்த சில இராஜதந்திர சிக்கல்கள் காணப்பட்டன. கப்பலுக்கு அனுமதி மறுக்கப்பட்டது ஏன்?

பதில் - எனக்கு தெரியாது இதுவே வாழ்க்கையாக இருக்கலாம் இதுவே இயல்பான விடயம்.

# போதை மாத்திரைகளுடன் கோண்டாவிலில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 17

கோண்டாவிலில் போதை மாத்திரைகள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்த பணத்துடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் வீரபத்திரர் கோவிலை அண்டிய பகுதியில் வைத்தே 23 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின்படி இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ-3)

# மருந்து தட்டுப்பாடு குறித்து ஆராய தொழில்நுட்பக் குழு!

கொழும்பு, ஓக. 17

தற்போதுள்ள மருந்து தட்டுப்பாடு குறித்து அறிக் கைகள் மற்றும் பரிந்துரைகளை சமர்பிப்பதற்காக தொழில்நுட்பக் குழுவொன்றை அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நியமித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

மருந்து தட்டுப்பாடு மற்றும் மருந்துகளின் விலை அதிகரிப்பு ஆகியவற்றின் மூலம் ஏற்பட்டுள்ள நெருக் கடிக்கு நிரந்தர தீர்வு கிடைக்காமையால் ஒட்டுமொத்த சுகாதார அமைப்புக்கும் சவாலாக மாறியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதற்கமைய நியமிக்கப்பட்டுள்ள தொழிநுட்பக் குழு இது தொடர்பான அறிக்கையை இந்த வார இறு திக்குள் கையளிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## வடக்கின்...

மன்னாரில் 286 மெகாவாட் மற்றும் பூநகரியில் 234 மெகா வோட்ஸ் திறன் கொண்ட 2 காற்றாலை திட்டங்களுக்கு 500 மில்லியன் டொலர் முதலீடு செய்ய தற்காலிக ஒப்புதல் வழங்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை சட்டத் திருத்தங்களால் தாமதமான 46 திட்டங்களில் 21 திட்டங்கள் அடுத்த வாரம் மின் கொள்வனவு உடன்படிக்கைகளில் நுழையும். மற்ற திட்டங்கள் 30 நாட்களுக்குள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## யுவான்...

படுத்தியிருந்தது. இதனால், இந்திய சுதந்திர தினத்தின் பின்னர் இந்தக் கப்பல் நேற்று அம்பாந்தோட்டையை வந்தடைந்தது.

துறைமுகத்துக்கு வருகை தந்த கப்பலுக்கு வழக்கமான சம்பிரதாயபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது. இந்தக் கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை தங்கி நிற்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக இந்தக் கப்பல், கடந்த 11ஆம் திகதி முதல் 17ஆம் திகதி முதல் தரித்து நிற்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கோட்டா...

சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, ஆம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்ட ரீதியான சில சலுகைகள் உள்ளன.

முன்னாள் ஜனாதிபதியும், அவரின் பின்னர் அவரது மனைவியும் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்களை பெற உரித்துடையவர்கள்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மறைவுக்கு பின்னர் அவரது மனைவிக்கு அத்தகைய வரப்பிரசாதங்கள் தற்போது கிடைக்கப் பெறுகின்றன என அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார். (அ)

# வீட்டில் இருந்தே கடலுணவுகளை பெற்றுக் கொள்வதற்கான வசதி

கொழும்பு, ஓக. 17

பொது மக்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளை ஒன்லைன் மூலம் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை ஒன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சேவை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பம்பலப்பிட்டி மீன்விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

அதனடிப்படையில் பிக்மீ ஊடாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் இருந்து தேவையான கடலுணவுகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்



### திருமதி முத்துலட்சுமி கணேசபிள்ளை

**தோற்றம்**
**06 - 10 - 1929**

**மறைவு**
**11 - 08 -2022**

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough, Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முத்துலட்சுமி கணேசபிள்ளை அவர்கள் 11.08.2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நமசிவாயம், தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற முருகுப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,கணேசபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், குகனேசன், சிவனேஸ்வரி, அம்பிகை, யோகேஸ்வரி, சிவனேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும்,சின்னப்பு அவர்களின் அன்புச் சகோதரியும்,பூமணி அவர்களின் மைத்துனியும், கதிர்காமநாதன், தெய்வச்சிலை, ஆனந்தகுமார், சோதிநாதன், மீரா ஆகியோரின் அன்பு மாமியாரும்,சத்தியமூர்த்தி, சத்தியதேவி, சத்தியநாதன், சத்தியசீலன், குகப்பிரியை, காலஞ்சென்ற குகபாலன், ரதி, ரமணி, ரமணன் ஆகியோரின் பெரிய தாயாரும், மலர்விழி - திரிபுரசோதி, அகல்விழி - சசிகரன், கயல்விழி - கிரிஷ்னகுமார், கதாகரனின் - காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியாரும்,கேசினிசூதனன்- சரனியா, சிருஷிகா- சுகிந்தன், சங்கீதா - பகீரதன், கிரிஷான்- அபிராமி, Dr.தர்சிகா- Dr.பிரணவன், தனுஷன், கிதுர்ஷன், தாரணி, ஜனகன், கோகுலன், சகானா ஆகியோரின் அன்புப் பேத்தியும், ஆருதி, ஆதிரை, ஆரணன், அகானா, ஆரணி, ஆதினி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 16 Aug 2022 5:00 PM - 9:00 PM, Wednesday, 17 Aug 2022 10:30 AM - 11:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Wednesday, 17 Aug 2022 11:30 AM - 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Wednesday, 17 Aug 2022 1:30 PM
Highland Hills Funeral Home & Cemetery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada

தகவல் :
**சிவனேசன் - மகன்**

தொடர்புகளுக்கு :
**குகனேசன் - மகன்** Mobile : +14168276875
**கதிர்காமநாதன் - மருமகன்** Mobile : +94765444625
**ஆனந்தகுமார் - மருமகன்** Mobile : +16473238687
**சோதிநாதன் - மருமகன்** Mobile : +14168263331
**சிவனேசன் - மகன்** Mobile : +14169912583

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### நவரட்ணராஜா நவரட்ணம்

**மலர்வு**
**02- 10 -1971**

**உதிர்வு**
**18 - 07-2022**



உங்கள் தோற்றம் மறைந்தாலும்!
உங்கள் தூயமுகம் தொலைந்தாலும்!!
தூரம் தொலைவில் நீங்கள் துயில் கொண்டாலும்!!!
உங்கள் தொடர்பை எம்மால்
துண்டிக்க முடியாமல் துவளுகின்றோம் தூயவனே
விதி செய்த சதியால் நீங்கள் வேறு உலகம் விரைந்தாலும்
உங்கள் சகோதரர்கள் உம் நினைவால்
விம்மித்தான் அழுகின்றார் இங்கே!!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

*நவா, ரஞ்சி, மகா, இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரரான திரு. நவரட்ணராஜா நவரட்ணம் அவர்களின் 31 ஆம் நினைவஞ்சலி நிகழ்வுகள் 17.08.2022 புதன்கிழமை அன்று நவா சகோதரன் அவர்களின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

தொடர்புகளுக்கு :
**004915211608534**

**தகவல்: நவா (சகோதரன்).**

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்



### திருமதி கருணாதேவி மகாதேவா

**தோற்றம்**
**23 - 07 -1953**

**மறைவு**
**15 - 08 -2022**

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும், கொண்ட கருணாதேவி மகாதேவா அவர்கள் 15.08.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னதம்பி, சற்குணம் தம்பதிகளின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பையா மகாதேவா அவர்களின் பாசமிகு மனைவியும், தர்சினி (ராஜி - கனடா), காலஞ்சென்ற ரமேஷ், திருகுமரன் (கனடா), கஜேந்திரன் (கனடா), தர்மினி (கனடா), விஷ்ணுப்பிரியா (கனடா) ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும், மோகனராஜா, சுகன்தனா, மேனகா, முகுந்தன், கிருசாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற தவமணிதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், ரங்கநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சோதிலிங்கம், கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு மச்சாளும், பிரணவன், அபினன், கிருசகி, கிஷோரி, ஜீவிகா, ஷாஸ், அடினா, சஞ்ஜித், ஆரா, சாஜினா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Tuesday, 16 Aug 2022 6:00 PM – 9:00 PM
Wednesday, 17 Aug 2022 5:30 AM – 6:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Wednesday, 17 Aug 2022 8:30 AM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**கஜேந்திரன் (மகன்)**

தொடர்புகளுக்கு :
**கஜேந்திரன் (மகன்)** – 0014168970606
**திருக்குமரன் (மகன்)** – 0014372432226
**ராஜி (மகள்)** – 0014163030021
**துர்கா (மகள்)** – 0016476241292
**விது (மகள்)** – 0014162680366
**கமலேஷ் (மைத்துனி)** – 0094770724413
**வசந்தி (சம்பந்தி)** – 0094715762209
**ராணி (சம்பந்தி)** – 0094776156085

*இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.*

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

பகல்
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-555, சேட்டை திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை



இரவு
07.00 மணி : பாரதீ



08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்



09.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு